# திறவுகோல்

2053 ஆடி

மாத இதழ்

வெளியீடு:
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.

மன்னையின் மைந்தர்கள்

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.

நோக்கம்:
மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...
பகிரி: +91 8220567322

இணையம்:
https://maintharkal.mannai.in/

# நிலை நிறுத்தத்தக்க வழிமுறையில் தமிழ் மரபுகளைப் பாதுகாத்தல் புத்துயிரூட்டல்.

*முன்னுரை :*

*செந்தமிழே உள்ளுயிராய் விளங்கும் பண்டைத்தமிழரின் மரபுகளைப் பாதுகாத்து புத்துயிர் ஊட்டும் வகை கட்டுரை உலகில் ஒரு புதிய திருப்புமுனை தான். ஆனாலும் மரபுகளைக் காப்பதும் அம்மரபுகளுக்கு புத்துயிர் ஊட்டுவதும் நம் தலையாய கடமைகளுள் ஒன்று. அந்த கடமையை தமிழனாகப் பிறந்த ஒவ்வொரு மனிதனும் தன் உளமுவந்து செயல்படுத்த வேண்டும். தமிழரின் கலை, பண்பாடு, மேம்படு வாழ்வு, வேளாண்மை வளம், பண்பாட்டு அசைவுகளைப் பட்டியலிட்டுப் பார்த்தால் தமிழனைப் போல் தனக்கென ஒரு தனி வழி, தனிமொழி, தனியான பருந்துப் பார்வையால் விழுங்கியவன் வேறு எந்த இனத்தவனாகவும் இருக்கவியலாது என்பதே நிதர்சனமான உண்மை. மேலும், கலைகளின் மேம்பாடு தமிழ் மரபுகளின் பாதுகாப்பு ஆகியவற்றை இக்கட்டுரையின் மூலம் விளங்கக் காணலாம்.*

*தமிழ் மரபில் கலைகள் :*

*தமிழ் மரபில் இல்லாத கலைகள் இல்லை. கடைச்சங்கம் வழங்கிய கொடைகளான தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய இலக்கண இலக்கிய நூல்களில் கொட்டிக் கிடக்கிறது தனித்துவம் மிக்க தமிழினத்தின் மரபுக் கலைகள். தமிழ் மரபுக்கலையில் முதலிடம் பெறுவது "முத்தமிழ் கலை" என்று அழைக்கப்படும் கூத்துக்கலை. இக்கூத்துக்கலையில் இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழும் பயன்படுவதால் இக்கலை முத்தமிழ் கலை என்று வழங்கப் பெறுகிறது. பண்டைத் தமிழர்கள் வாழ்வை அகம், புறம் என இரண்டாகப் பகுத்தது போல் கூத்தையும் இரண்டாகப் பகுத்துள்ளனர் என்பதை சிலப்பதிகார அரங்கேற்றுக் காதையில் அடியார்க்கு நல்லார் எடுத்துரைக்கிறார்.*

*"இருவகைக் கூத்தின் இலக்கணம் அறிந்து*
*பலவகைக் கூத்தும் விலக்கினிற் புணர்ந்து "*

*( சிலம்பு. அரங்கேற். 1213 )*

*கூத்து ஆட்டம் என்று வழங்கப்பெற்றது.கூத்தினை சங்ககாலத்தில் நடனம், நாடகம் என்றும் வழங்கியமையைக் காணலாம். சடங்குகளால் வரையப்பட்டது நாடகம் எனல் பொருத்தமுடையதாகும். கூத்து நிகழ்த்துக்கலை வடிவங்களிலேயே மேம்பட்ட கலை எனலாம் .இக்கலையை பற்றி எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான புறநானூறு சிறப்பாக விளக்குகிறது. கூத்து ஆடும் இடம் பற்றியும் கூத்து கலைஞர்கள் பற்றியும் தெளிவாக*

விளக்குகிறது.

"பூம்போது சிதைய விழுந்தெனக் கூத்தர்
ஆடுகளம் கடுக்கும் அகநாட்டையே "
(புறம் : 28 : 13:14)

என்று புறநானூறு இருபத்தி எட்டாம் பாடலில் உறையூர் முதுகண்ணன் சாத்தனார் அழகாக எடுத்துரைக்கிறார். கூத்து ஆடும் இடத்தை "களம்" என்றும் "களரி" என்றும் குறிப்பிடுகின்றனர். கலாநிதி கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் களம் என்பதை கூத்தர் ஆடும் களம் என்று ஏற்றுக்கொள்ள முடியாதென மறுமொழி தெரிவிக்கிறார். ஆண்கள் மட்டுமல்லாது பெண்களும் கூத்தில் சிறந்து விளங்கி இருந்தார்கள் என்பதற்கு "நாடக மகளிர்" "ஆடல் மகளிர்" "ஆடுகள மகள்" என்ற பெயர்கள் சான்றாவணமாக விரிகிறது. கலைஞர்கள் தங்கள் தொழிலோடு இணைந்து கலைப் பயணத்தைத் தொடர்ந்தார்கள். அகநானூறு பாவைக்கூத்து என்ற பொம்மலாட்டம் குறித்து பல்வேறு சான்றுகளை பகர்கிறது.

"வெறியர் வியன் களம் பொறப வல்லோன்
பொறியமை பாவையின் தூங்கல் வேண்டின் "
(அகம் : 98)

சங்ககாலத்தில் ஆடர் கலைஞர்களும் பரவலாக இருந்தனர் என்பதற்கு கபிலர் பாடல் சான்று அளிக்கிறது. ஆடலிலும் பாடலிலும் வல்லமை பெற்ற ஒரு குடி இருந்தது அக்குடி விறலியர் குடியாகும். கூத்தர், பொருநர், பாணர், பறையர், துடியர், கடம்பர், கண்ணுளர், விறலியர், வயிரியர், கோடியர், அகவுநர், புலவர் போன்ற பல நாடகக் கலைஞர்கள் இருந்தமையை சங்க இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன. தமிழரின் நாடகக் கலையை பதிவு செய்த இலக்கியங்கள் பற்றி பழந்தமிழ் புலவன் தொல்காப்பியன் இயற்றிய தொல்காப்பியத்தில்

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட்டு ஆயிரு பாவிலும்
உரிய தாகும் என்மனார் புலவர்"

( தொல். அகத். 56 )
கூறப்பட்டுள்ளது. இந்நூற்பா கலியென்றால் கலித்தொகையையும்,பரிபாட்டு என்றால் பரிபாடலையும் கூறுகிறிப்பிட்டுள்ளது.

குரவைக் கூத்து ( அ ) பெண்கள் ஆட்டம் :
குரவைக் கூத்து சங்க இலக்கியங்களிலும், சிலப்பதிகாரத்திலும் பயின்று வரும் ஒருவகையான கூத்து. இது பெண்கள் ஆடும் ஆட்டம் என்பார் சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார். தீய நிமித்தங்கள் நடைபெறப்போகிறது என்று தெரிந்தால் தன் குலதெய்வத்தையோ! இஷ்ட தெய்வத்தையோ! நினைத்து பெண்கள் கூத்தாடி தன் முறையீட்டை கடவுளிடம் வைப்பர். இக் குரவைக்கூத்தினைப் பற்றி சிலப்பதிகாரம் ஆய்ச்சியர் குரவை என்ற காதையில் மிக விரிவாய் கூறுகிறது. இக்கூத்து பின்னாளில் "கும்மி" என்ற இலக்கிய வகை தோன்றுவதற்கு காரமாண இருந்திருக்கலாம். கூத்து "மேலிருந்த கடவுள்களை புழுதி வீட்டிற்கு அழைத்து வந்தது" என்கிறார் நாடகக் கலைஞர் "கி. பார்த்திபராஜா."
குரவை கூத்து பற்றி....

"என்று யாம் கோத்த குரவையில் ஏத்திய தெய்வம் நம்
ஆத்தலை பட்ட துயர் தீர்க்க "
(சிலம்பு. ஆய்ச்சியர் குரவை)

சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவை கூறுகிறது. மேலே சொன்னது போல பெண்கள் தமக்கு வரும் தீய நிமித்தங்கள் தம்மை அணுகாது இருக்க தங்களது குல தெய்வத்திடம் பாடியும், ஆடியும். இதுமட்டுமல்லாது குன்றக்குரவை, கானல்வரி, வேட்டுவவரி, வள்ளைப்பாட்டு போன்ற வகைகளையும், கலை இசை நுணுக்கத்தையும் சிலப்பதிகாரம் நன்கு எடுத்துரைக்கிறது. இதிலிருந்தே நமக்கு நன்கு புலப்படும் செய்தி தமிழ் மரபில் ஆடவர்களும் பெண்களும் கலைகளை ஆதரித்தனர் என்பது நன்கு புலப்படும். தொன்று தொட்டு இன்று வரையும் தமிழ் கலை எச்சமாக அடுத்த தலைமுறைக்கு கடத்தப்பட்டு கொண்டே இருக்கிறது என்கிறார் நாடகாசிரியர் கி.பார்த்திபராஜா.

தமிழரின் பண்பாட்டு மரபு :
பண்பாடு என்பது பண்படுத்தல் ( சீர்படுத்தும்) எனும் கலைச்சொல்லில் இருந்து தோன்றியது. தமிழர் பண்பாடு என்பது விளக்கிலிருந்து வெளிப்படும் சுடர் போல தூய்மையும், தாய்மையும் கொண்டது. வீரமும் காதலும் தமிழர்களின் இரு கண்ணைப் போல பேசப்படுகிறது. வீரத்தில் புறம் பற்றிய பொருள்களையும், காதலில் அகம் பற்றிய செய்திகளையும் அடக்கி உள்ளதால் அகம் புறம் என்ற இரு பாகுபாட்டில் தமிழ் பண்பாட்டு மரபு ஒளிர்கிறது. ஆட்டமும் பாட்டமும் மந்திரச் சடங்குகளோடு தொடர்புடையவை என்கிறார் தொ. பரமசிவன். பண்பாடு என்பது தமிழரின் மந்திரசொல். "மந்திரமே உலக நாகரிகத்தின் தொடக்க காலத்தில் கலைகளுக்கும், விஞ்ஞானத்திற்கும் மூலமாக இருந்தது" என சமூகவியல் அறிஞர் " பிரேசர் ஜார்ஜ் தாம்சன்" கூறுகிறார். தமிழரின் பண்பாட்டினை அடுத்த தலைமுறையினருக்கு கொண்டு சேர்க்கும் விதத்தில் சங்க இலக்கியங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தமிழரின் பண்பாட்டு மரபைப்

பட்டியலிட்டால் மிக நீண்ட பட்டியலாக சென்று கொண்டிருக்கிறது. தமிழரின் பண்பாட்டில் முதலிடம் பெறவது கருணை எனம் கண்ணோட்டம். ஒழுக்கம், கல்வி, வழிபாடு, விளையாட்டு, உணவு, உடை என்று பல்வேறு கூறுகள் தமிழ் பண்பாட்டில் கொட்டிக் கிடக்கிறது.

*( I ) கருணை என்னும் கண்ணோட்டம் :*

*கண்ணுக்கு அழகு கண்ணோட்டம் ( இரக்கம்) கண்ணோட்டத்தின் முன்னோட்டத்தை நம் கண்ணுக்கு விருந்தளிக்கும் விதமாக சங்க இலக்கியம் ஒரு சான்றினை எடுத்துரைக்கிறது. தலைவியை விட்டுப் பொருள் தேடிச் சென்று பிரிந்த தலைவன் கார் காலம் வந்ததும் தலைவியைக் காண விரைந்து வருகிறான். அவன் வருகிற தேரில் ஒரு வெண்கல மணி கட்டப்பட்டிருந்தது. அந்த மணியிலிருந்து வருகிற ஓசை காடு முழுவதும் வேகமாக ஒலி எழுப்பிக் கொண்டே வந்தது. அப்போது மகரந்த மதுவை உண்டு களித்து காம இச்சையின் உச்சத்தைத் தொட்டுப் பார்க்க நினைத்த இரண்டு வண்டுகளின் இணைப்பு ஒரு மலரில் இருப்பதைக் கண்டான். மணியின் ஒலி கேட்டு இணைந்த வண்டுகளின் இணைப்பு பிரியத் தொடங்கியது. அப்போது அந்த இணைப்பு விலகக்கூடாது என்பதற்காக தலைவன் மணியின் நாவை அறுத்து எறிந்து தன் இரக்க உணர்வை வெளிப்படுத்திய விதத்தை அகநானூறு அழகுற எடுத்துரைக்கிறது.*

*"பூத்த பொங்கர் துணையொடு வதிந்த*
*தாது உண் பறவை பேதுறல் அஞ்சி*
*மணி நா ஆர்த்த மாண் வினைத் தேரன் "*
*(அகம் .4:10-13)*

*இதிலிருந்தே வெளிப்படும் தமிழரின் இரக்க உணர்வு.*
*( II ) ஒழுக்கம் தமிழரின் பழக்கம் :*

*ஒழுக்கம் தமிழரின் பழக்கமாகவும் உயிராகவும் கருதப்பட்டது இவ்வொகத்தை களவொழுக்கம் என்றும், கற்பொழுக்கம் என்றும் அகப்பொருள் இலக்கணம் வகைப்படுத்துகிறது. ஒழுக்கம் என்பது நடத்தை என்பதைக் குறிக்கும். ஒரு மனிதன் நல்லவனா! தீயவனா! என்பனவற்றை குறிக்கும் சாதனமாக இருப்பது ஒழுக்கமே.*

*ஒழுக்கம் விழுப்பம் தரலாம் ஒழுக்கம்*
*உயிரினும் ஓம்பப் படும்"*
*(ஒழுக்கமுடைமை - 1 குறள்)*

*என்கிறார் வள்ளுவர். ஒழுக்கமில்லாத பழக்கம் பாழானது என்கிறது முதுமொழிக்காஞ்சி. ஒழுக்கத்தை தன் உயிராக கொண்டு விளங்கினர் தமிழர் என்பதை அற நூல்களின் மூலம்*

நாம் அறிந்து கொள்ளலாம்.

( III ) தமிழர் மரபில் ஓங்கும் கல்வி :
தமிழர்கள் கலையில் சிறந்தது போல் கல்வியில் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதிருந்தனர். எந்த மொழியியல் அறிஞனும், விஞ்ஞானியும், ஆராய்ச்சியாளரும் கண்டறிய முடியாத மனித இனத்தின் தோற்றம் முதல் அவர்களின் பேச்செழுத்துக்கள் பிறக்கும் இடம் வரை தமிழர்கள் அறிந்து வைத்திருக்கின்றனர் என்பதே தமிழர்கள் கல்வியில் சிறந்து விளங்கியதற்கு சான்று. மனிதன் தோன்றிய இடம் இதுதான் என்று ஆராய்ச்சியாளராக இருந்து பதிவு செய்துள்ளனர் சங்கப் புலவர்கள். ஒரு மனிதனுக்கு எத்தனை அறிவு இருக்கிறது என்பதை உலக கண்டத்திலேயே எவனும் சொல்லவில்லை தொல்காப்பியன் என்ற தமிழறிஞர் மட்டும்தான் மனிதனுக்கு ஆறறிவு என்று அறுதியிட்டுக் கூறுகிறார். தொல்காப்பியப் பொருளதிகாரத்தில்

" ஒன்றறிவதுவே உற்றறி வதுவே
ஆறறிவதுவே அவற்றோடு மனனே "

(தொல்.பொருளதி.நூற் - 1517)
கூறப்பட்டுள்ளது. தமிழர்கள் கல்வியில் சிறந்தவர்கள் என்பதை மகாகவி பாரதியார் தன் கவிதையில் " கல்வி சிறந்த தமிழ்நாடு" "புகழ் கம்பன் பிறந்த தமிழ்நாடு" என்ற வரிகளின் மூலம் எடுத்துரைக்கிறார். யாமரிந்த மொழிகளில் தமிழ்மொழி போல் வேறு எங்கும் இல்லை என்பதையும் அவர் நன்கு புலப்படும்படி உரைக்கிறார். "தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவர்க்கோர் குணமுண்டு" என்கிறார் காந்தியக் கவிஞர் ராமலிங்கம். இவர்களின் மூலம் தமிழர்கள் கல்வியிலும் உயர்ந்தவர்கள் என்பது உசிதமாகிறது.

தமிழர் மரபை மீட்டெடுக்கும் ( அ ) பாதுகாக்கும் வழிமுறைகள் :
நவீன மயமாக்கப்பட்ட இன்றைய காலச் சூழலில் உலகத்திய பெருவெளியில் தமிழரின் மரபுக் கலைகளையும், பண்பாட்டையும் பாதுகாக்க வேண்டுமெனில் மாண்ட கலைகளை மீட்டெடுக்கும் வழிமுறைகளை ஒவ்வொருவரும் கையில் எடுக்க வேண்டும்.

இன்றைய சூழலில் வழிவழியாக கடைபிடிக்காமல் புழக்கத்திலிருந்து விடுபட்ட பழம்பெரும் மொழிகளான ஹீப்ரூ, பைசா, பிராகிருதம் போன்ற மொழிகள் இன்று இல்லாமல் போனதற்கு காரணம் மொழிகளை யாரும் வழிவழியாக கடைபிடிக்கவில்லை பேசவில்லை என்பதே நிதர்சனமான உண்மை.

எந்த ஒரு மொழியாக இருந்தாலும் கலையாக இருந்தாலும் பழக்கவழக்கங்களாக இருந்தாலும் அடுத்த தலைமுறைக்கு அது கடத்தப்பட வேண்டும் அப்படி கடத்தப்படவில்லை. ஆனால் கலை, மொழி, பண்பாடு, பழக்க வழக்கங்கள் எல்லாம்

நாளடைவில் மறைந்து போகும் இந்த கருத்துக்களை மனதில் ஏற்று தங்கள் தாய்மொழியின் கலைகளை பண்பாட்டை பழக்கவழக்கத்தை மரபு வழியாக அடுத்த தலைமுறையினருக்கு கொண்டு சேர்த்தால் நம் மரபை பாதுகாக்க முடியும் என்பது ஒரு வகை.

இணைய மையமான இக்காலத்தில் எல்லா இடங்களிலும் அலைபேசிகள், தொலைக்காட்சிகள், வானொலி போன்ற செயலிகள் மூலம் நவீனம் வளர்கிறது. அப்படிப்பட்ட செயலிகள் மூலம் மரபு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல், மரபு மீட்டெடுப்பு பற்றிய கருத்துரை வழங்கல், மரபுக் கலைகளை காட்சிப்படுத்துதல் போன்ற செயல்பாடுகள் மூலம் மரபை மீட்டெடுக்கலாம் என்பது இன்னொரு வகை.

பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், போட்டித்தேர்வுகளிலும் கலையையும், மொழியையும், பண்பாட்டையும், மரபுகளையும், பற்றிய அரிய பெரும் தகவல்களை புகுத்தி புழக்கத்திற்குக் கொண்டு வந்தால் தமிழ் மரபும் கலை பண்பாடும் மேலோங்கும்.

கலாச்சார நிகழ்வுகளிலும், திருவிழாக்களிலும், திருமணங்களிலும் தமிழரிநிகழ்த்துக் கலைகளை நிகழ்த்திக் ன் மரபுக் கலைகளான காட்டுவதன் மூலம் மரபை மீட்டு கொணரலாம்.

தாய் கலைகளை மரபு வழியாக கலைஞர்கள் தன் சந்ததியினருக்கு சொல்லிக் கொடுத்து அவர்களுக்கும் கலை ஆர்வத்தை ஊட்டி அதன்மூலம் மரபைப் பாதுகாக்கலாம்.

மேலுள்ள எல்லா செயல்திட்டங்களையும் அரசோடு மக்களும் இணைந்து செயல்படுத்தினால் நம் மரபோடு கலை பண்பாட்டுக் கூறுகளையும் பாதுகாக்க முடியும் என்பதே என்னுடைய தலையாய கருதுகோள்.

தமிழ் மரபுக்கு புத்துயிர் ஊட்டுதல் :
ஒரு மொழியை அந்த மொழியாகப் படித்தாலும், எழுதினாலும், பேசினாலும் அதன் வீரியம் குறையாது. ஒரு மொழியை இன்னொரு மொழியோடு சேர்த்து மொழிக்கலப்பு செய்தால் அம்மொழியின் மரபும் பண்பாட்டுக் கூறும் நாளடைவில் மரித்துப் போகும்.

பழங்காலத்தில் கதைகள் நாடகங்களாக நிகழ்த்தப்பட்டன.அக்கால நாடக வடிவங்களின் எச்சமே இன்றைய நெடுந்தொடர்களும், திரைப்படங்களும். இன்றைய நெடுந்தொடர்களுக்கும், திரைப்படங்களுக்கும் மூலம் எதுவென்றால் பழங்கால கூத்தமைப்பு முறையேயாகும். கூட்டமைப்பின் சாரத்தை மட்டும் எடுத்துக்கொண்டு இன்றைய நவீன சீர்கேடுகளையும், சமூக மாற்றங்களையும் நாடகம் ஆக்கினால் அக்கலையின் மரபும், நவீன இணைப்பும் மரபை புத்துயிர் ஊட்டும் என்பது என் கருத்து.

பாடப்புத்தகங்களில் கலையை பண்பாட்டை உணர்த்தும் வகையில் பாடங்கள் வைக்கப்பட்டால் அவர்கள் பாடத்தோடு கலைகளையும் கற்றுக் கொள்ள ஒரு வாய்ப்பாக அமையும்.

நாள்தோறும் வெளியாகும் விளம்பரங்கள் நாளிதழ்கள் ஆகியவற்றில் தலையங்கமாவும் இதழின் சாரமாகவும் தமிழின் மரபையும் கலையையும் வண்ணப்படங்களுடன் அரை பக்க, ஒரு பக்க அளவிற்கு பதிவு செய்தால் படிக்கின்ற இளைஞர்கள் வண்ணப் படங்களோடு தன் எண்ணத்தையும் கலையின் பக்கம் திருப்ப ஒரு வாய்ப்பாக அமையும்.

திருவிழாக்கள் போன்ற பெரு நிகழ்வுகளில் வைக்கப்படும் வண்ணப் பதாகைகளி கலை பற்றிய வாசகங்கள் எழுதப்பட வேண்டும்.

கலை மரபு பற்றிய மாநாடுகள் நடத்தப்படவேண்டும். அம்மாநாடுகளில் மாணவர்களின் பங்கும் நிறைந்திருக்க வேண்டும். மாணவர்களின் தனித்திறன் வெளிப்படுத்தல் போன்ற கலை இலக்கிய நிகழ்வுகளையும், போட்டிகளையும் நடத்தினால் கலை வடிவங்களையும் மாணவர் தனித்துவத்தையும் புத்துயிர் ஊட்டும் வகையில் வெளிக் கொண்டு வரலாம்.

பழமையான உணவு வகைகளை காட்சிப்படுத்துதல், தமிழ் பூக்களை காட்சிப்படுத்துதல், தமிழர் பாரம்பரிய உணவான கேழ்வரகு கூழ், கம்மங்கூழ் போன்றவற்றை மாணவர்களுக்கு மதிய உணவாக பள்ளிகளில் தினம்தோறும் வழங்கினால் பாரம்பரிய உணவுப் பண்பாட்டை மீட்டுருவாக்கம் செய்யலாம்.

பள்ளி கல்லூரி மாணவர்களுக்கு வாரம் ஒரு நாள் மாணவர்கள் கதர் வேட்டியிலும் மாணவிகள் சேலையிலும் வரும் வழக்கத்தை ஏற்படுத்தினால் நம் பாரம்பரிய ஆடை அணியும் பண்புக்கு புத்துயிர் ஊட்டலாம்.

பள்ளி சுவர்களிலும் கல்லூரி சுவர்களிலும் கலை பற்றிய ஓவியங்கள் சுவரொட்டிகள் சிற்ப முறைமைகள் ஆகியவற்றை வண்ணப்படங்களாக வரைவதன் மூலம் தமிழ் பண்பாட்டை மீட்டு உருவாக்கம் செய்யலாம்.
பெண்கள் சேற்றில் இறங்கி நாற்று நடுவது ஆண்கள் ஏர் கொண்டு உழுவது போன்ற செயல்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்தும் ஒரு திட்டத்தை பள்ளி நிர்வாகமும், கல்லூரி நிர்வாகமும் அறிவித்து அதற்கு மதிப்பெண் வழங்குதல் போன்றவற்றையும் செயல்படுத்த வேளாண்மையையும் உழவையும் பாதுகாக்கலாம் மீட்டுருவாக்கம் செய்யலாம்.

*Bed period* என்ற விளையாட்டு நேரத்தில் மாணவர்களுக்கு உழவின் மேன்மையையும், வேளாண்மை பாதுகாப்பையும் நாடகமாகவும் கருத்துப்படமாகவும் காண்பித்தால் மாணவர்கள் அக்கலையை வளர்த்தெடுக்க முனைவார்கள். அப்படி முனைந்தால் உழவும்

வளரும், வேளாண்மை வளமும் பெருகும், நாட்டின் பொருளாதாரமும் மேம்படும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

இதைப்போன்ற செயல்பாடுகளை செய்வதன் மூலம் மாணவர்களின் செயலாக்க திறமும் மரபைப் போற்றும் மாண்பும் அவர்களின் உள்ளத்தில் ஆழப்பதியும். ஆழப் பதிந்தால் அவர்கள் அந்த மரபை அடுத்த தலைமுறையினருக்கு கொண்டு சேர்ப்பார்கள் என்பதில் ஐயமில்லை. மேலுள்ள எல்லா வழிமுறைகளையும் பின்பற்ற நம் தமிழ் மரபை பாதுகாத்து புத்துயிர் ஊட்ட முடியும் என்பது இக்கட்டுரை நமக்கு விளக்கும் சான்றாவணம்.

முடிவுரை :
தொன்று தொட்டு இன்று வரை தமிழரின் மரபு கலையும் பண்பாட்டுக் கூறுகளும் செம்மை உடையதாக இருந்து வருகிறது. நிலைநிறுத்த தக்க வழிமுறைகளைப் பெறவேண்டுமானால் மரபுகளை அடுத்த தலைமுறையினருக்கு அவர்களின் வழியே கொண்டு சேர்க்கவேண்டிய தலையாய கடமை இன்றைய சமூகத்திடம் இருக்கிறது. சமூகத்தோடு தொடர்புடையது வாழ்வில். வாழ்க்கை நிலையை மேம்படுத்துவது மரபு. மரபை நெறிப்படுத்துவது மொழி. மொழியின் ஊற்றுக்கண் பண்பாடு. பண்பாட்டு அசைவுகளோடு நாம் செயல்பட்டால் இன்னும் நம் கலைகள் உணவு வகைகள் ஆடை அணிகலன்கள் பண்பாட்டுக் கூறுகள் ஆகியவற்றை பாதுகாப்பது நமது கைகளில் உள்ளது. தமிழ் மரபு மாறிப் போகாமல் எச்சமாக நின்று தானாகவே வளர்ந்து வருகிறது. அந்தப் பண்பாட்டை தமிழ்மொழியின் மரபை நிலை நிறுத்த வேண்டுமாயின் கட்டுரை வெளிப்படுத்தும் வீரிய கருத்துக்களை உள்வாங்குதல் நிலைநிறுத்தல் பயிற்றுதல் பயிற்றுவித்தல் கற்றல் கற்பித்தல் போன்ற பல்வேறு செயல்பாடுகளையும் நாம் செய்வதன் மூலம் தொன்றுதொட்ட பழமை நின்றுவிடாமல் பன்னெடுங்காலம் தொடரும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. அப்படித் தொடரும் கலைகள் மரபையும் ஊக்குவிக்கும் இனத்தின் செயல்திறன் ஆகியவற்றையும் பாதுகாக்கும் என்கின்ற வகையில் இக்கட்டுரையானது அமைக்கப்பட்டிருக்கிறது நிலைநிறுத்தத் தக்க தமிழ் மரபுகளை ஏட்டளவில் அளவில் மட்டுமல்லாது நாடளவில் கொண்டு சேர்க்கும் ஒரு மந்திரச் செங்கோல் ஆக இக்கட்டுரை அமையும் என்பதில் எவ்வித மாறுபாடும் வேறுபாடும் இல்லை.

மரபைக் காப்போம், பண்பாட்டையும் மீட்போம், மொழிப்பற்று கொள்வோம் தலைமுறையை வெல்வோம்.

— ச. வாசுதேவன்,
முதுகலை தமிழ் முதலாம் ஆண்டு,
இலக்கியத்துறை - தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 10
அலைபேசி எண் : 7094762430 | மின்னஞ்சல் : shankarvasu98@gmail.com

# பாரியன்பன் நாகராஜன் - கவிதைகள்

உனக்கும் எனக்கும்
போட்டி என்கிறாய்.
சரி என்றேன்
விதிமுறைகளை
கேட்கிறேன்.
சரியாய் விடை
சொல்ல வேண்டும்
என்கிறாய்.
சொல்கிறேன்
என்றேன்.
ராத்திரி வானத்தின்
மொத்த நட்சத்திரங்களின்
எண்ணிக்கையைக்
கேட்கிறாய்.
நொடியும் யோசிக்காமல்
987654321123456789
நட்சத்திரங்கள்
என்கிறேன்.
நீயோ தவறு
என்கிறாய்.
உன்னையே
நான் எண்ணிப்
பார்க்கச்சொல்கிறேன்.
நீ செல்லமாக
என்னை
அடிக்க வருகிறாய்.
உன்னிடமிருந்து போலியாய்
விலகி ஓடுகிறேன் நான்.
/

இது வரையில்
பேசியதில் பொய்யில்லை
எனச் சொல்வதற்கில்லை.
இனி
என் பேச்சில் மெய் இருக்காது
எனச் சொல்வதற்குமில்லை.
பொய்யும் மெய்யும்
கலந்ததே "மெய்
/

கடவுளைத் தரிசிக்க
கோவிலுக்குச் செல்லவேண்டும்.
எனும் நினைப்பை
என்னுள் விதைத்தவன்
கடவுள்.
எந்த உடை என்ன நிறம்
யாருடன் செல்வது என
அனைத்தும் தீர்மானித்தவனும்
அவனே.
நடந்து செல்வதா
பேருந்தில் போவதா
எப்படிப் போவது எப்போது பயணிப்பது
எல்லாம்
அவன் கட்டளையின் கீழே.
அர்ச்சனைத் தட்டு முதல்
ஆரத்தி சூடம் வரையில்
அவன் சுட்டிய நேரத்தில்.
தரிசனமும்
என் விண்ணப்ப வேண்டுதலும்
நேர்த்திக்கடன் முதல்
உண்டியல் காணிக்கை கூட
அவன் கணித்தபடியே.
கோபுர வாசலில்
வாய்க்கும் வயிற்றுக்கும்
கையேந்தி நிற்கும்
வயோதிகருக்கும்

மாற்றுத்திறனாளிகளுக்கு
கொடை வழங்குதல் கூட
அவன் தீர்ப்பின் படியே.
அவனின்றி
ஓரணுவும் அசையாது
என பாடவைத்தவனும் அவனே.
பல்லின்மேல்
நாக்கைப்போட்டு
பேச்சு வாங்கிக் கட்டிக்கொள்பவனும்
கூட அவனே...!
/
உலகை வெறுத்து
இல்லற வாழ்வில்
நாட்டமிழந்து ஏனடா
இந்தக்கோலம்.
இப்படி
வாழவரவில்லை
எப்படியும்
வாழநினைப்பது
வாழ்க்கையும் இல்லை.
வாழவந்து விட்டு
வாழாமல்
எதற்கு...?
ஏன்...?
வேடம்
தரிக்கப் பார்க்கிறாய்.
இதை
உடுத்திக்கொண்டு
தப்பிக்க நினைக்கிறாயா?
அப்படி தப்பித்தல்
பாவம்
மகாபாவம்.
இன்பதுன்பமில்லாமல்
வாழ விருப்பப்படுகிறாய்
எனத் தெளிவாய்
விளங்குகிறது.
போடா போ
காரி உமிழ்ந்து
உன் ஒப்பனை நான்
கலைக்கும் முன்
களைந்தெறி
உன் வேடத்தை.
கட்டுண்டு வாழ
நீ
சித்தனுமில்லை
புத்தனுமில்லை.
பக்குவப்படத்தான்
எனில்
வாழ்ந்து பக்குவப்படு.
ஓடிஒளிந்து கொள்ள
இது விளையாட்டல்ல
வாழ்க்கை.



- ஆக்கம்
பாரியன்பன் நாகராஜன்,
குடியாத்தம் - 632602
கைப்பேசி: 9443139353

# அந்தி வானம் பார்த்து அழகாய் ஆகாச நடை போட்டு

மணல் வெளியில் ஓவியம் வரைந்து
இயற்க்கையின் மடியில் கவிதை வடித்து
உன் கண்ணங்களில் அதை சமைத்து
இதழ்களில் சுவைத்து இனிய சொற்கள்
மொழிய பல
இன்பங்கள் வழிய
இனிய இசைகளை செவிகளுக்கு ஊட்டி
விருந்தோம்பல் செய்த காதல் காலம்
கரையேறிய
இந்த காலம்...!!!

## மாயோன்

விடியலில் விழித்திறக்க
வேய்ங்குழல் நாதத்தில்
செவித்திறக்கிறாய்
மாயோனே ...

புள்ளிமான் என
ஓடிவருகிறது மனம்
உன்னை அடைந்திட ...

உன் விரலில் என்விரலும்
கோர்த்து கொள்
இணையோனே ....!!
03-துளிப்பாக்கள்

1)
கிளையின் பிடியில் பட்டம்
எடுக்கும் முயற்சியில் காற்று ...!

2)
நிலவை கொன்று ருசிக்கும் இரவு.
சக்கையாய் பொழியும் வானம் ...!!

3)
மாற்றத்தை ஏற்காத மனம்
சல்லடையில் தங்கிய கல்லாகவே
இருக்கிறது ...!!

4)
கொய்யா (த) கனி
ருசிக்கும் அணில்
பசிக்கிறது எனக்கும் ...!!

5)
அடர்ந்த கானகம் வழியே
நுழைகிறது வேங்கை ...
மிரண்ட விழிகளோடு மான்கள் ....!!

--

ச. இராஜ்குமார்,
திருப்பத்தூர் மாவட்டம்.

# பொன்னுத்தாயி...

பூஞ்சோலை அழகிய
கிராமம். இயற்கை எழில்
கொஞ்சும் கிராமத்தின்
சாலையின் இரு ஓரங்களிலும்
வரிசையாய் புளிய
மரங்கள் அணிவகுத்து
நிற்க
இக்காட்சிகளை ரசித்துக்கொண்டே
சென்றதில் பயண
களைப்பே தெரியாமல்
நமது வாகனம் பூஞ்சோலை
கிராமத்தினுள்
நுழைந்தது.

டிரைவர் தம்பி
வண்டியை ஓரமா
நிறுத்துப்பா...என்றார்
வி.டிவி (வில்லேஜ் டிவி)
தொலைக்காட்சியின்
தொகுப்பாளர் சரவணன்.

சிறய ஓட்டு வீடுதான்.
வீட்டின் வலப்பக்கத்தில்
சிறிய கொட்டகை.
அதனுள் கன்றுடன்
பசு மாடுகள் மற்றும்
வெள்ளாடுகள்
கட்டப்பட்டிருக்கின்றன.
வெள்ளை நிற நாய்
ஒன்று குரைத்துக்கொண்டே
ஓடி வந்தது. அதற்குள்
நாயை அதட்டிக்கொண்டே
வீட்டிலிருந்து வெளியே
வந்தவள் பெரிய
வாகனத்திலிருந்து
இறங்கி வந்தவர்களிடம்...
யாருப்பா நீங்க
இங்க எதற்கு வந்திருக்கீங்க...என
கேட்டுக்கொண்டே
வந்த 50 வயது மதிக்கத்தக்க
அப்பெண்ணிடம்...

அம்மா ... வணக்கம்
நீங்க தானே பொன்னுத்தாயி...
ஆமா... நீங்களெல்லாம் யாரு?
என்று கேட்டவளிடம்

அம்மா...வி.டிவியில்
வருகிறோம்.
உங்ககிட்ட கொஞ்சம்
பேசணும் என்றார்
சரவணன்.
எங்கிட்ட என்ன பேசணும்
எனக்கு அப்படியெல்லாம்
பேசத்தெரியாது.
நான் பள்ளிக்கூடமே
போகாதவ...

அம்மா...பயப்படாதீங்க
ஒவ்வொரு மாதமும்
ஏதாவது ஒரு கிராமத்திற்குப் போய்
"சாதனைப் பெண்" என்ற
தலைப்பில் அவர்களிடம் பேட்டி
எடுத்து அதை நம்ம
வி.டிவியல ஒளிபரப்பு
பண்ணுவோம். இந்த
மாதம் உங்களைப் பேட்டி

எடுக்க வந்திருக்கோம் என்றார்
சரவணன்
எனக்கு பேச வராது
என்று தயங்கினார்
பொன்னுத்தாயி.

அம்மா...நான் கேட்கிற கேள்விக்கு
பதில் சொன்னால்
மட்டும் போதும் என்றார் சரவணன்.

மற்றவர்கள் கேமரா,
மைக் என தயார்
படுத்திக்கொண்டு
இருந்தனர்.
இந்தா பெரியவளே
இங்க வா
இவங்க என்னமோ
கேட்குறாங்க
என்னன்னு கேளும்மா என்றாள்
பொன்னுத்தாயி...
நான் வரலம்மா, நீயே
அவங்ககிட்ட பேசு
என்றாள் கல்லூரி படிப்பை
முடித்திருந்த ராஜி.

அம்மா உங்களுக்கு
எத்தனை குழந்தைகள்
என்றார் சரவணன்.

அத ஏன் கேட்குறீங்க.. ஐந்து பெண்
குழந்தைகள்.
ஆண் வாரிசு வேணும்னு
நினைச்சோம்.
ஆனால் கடவுள் கொடுத்தது
ஐந்தும் பெண்பிள்ளைகள்
தான்.

கடைசிப் பொண்ணு
பிறந்தவுடன் என் கணவர்
மாரடைப்புல இறைந்திட்டாரு.
ஆஸ்பத்திரி கூட
தூரத்தில இருக்கிறதால
ஆஸ்பத்திரிக்கு போகிற
வழியிலேயே
இறந்துட்டாரு.
அதற்கு அப்புறம்
உறவுக்காரங்க
இறுதிச்சடங்குகள்
முடித்து செல்லும்போது
பிள்ளைகள் படித்தது
போதும், வேலைக்கு
அனுப்பு என்று சொல்லிவிட்டு
எல்லாரும் போயிட்டாங்க.
நான் என் பிள்ளைகள்
படிக்க வைக்கணும்
அவங்க எதிர்காலம்
நல்லாயிருக்கணும்
என நினைச்சு எல்லாரையும்
படிக்க வைக்கிறேன்.

பெரியவள் ராஜி
வேலைக்குச் சேர்ந்து
விட்டாள்.
மற்ற மூவரும் படிக்கின்றனர்.

உண்மையிலேயே
நீங்கள் பெண்களுக்கெல்லாம்
சிறந்த உதாரணம்.
கணவர் இல்லாமல்
மனம் தளராமல்
கூலி வேலை செய்து
பிள்ளைகளைக் கரைச்
சேர்க்க பாடுகின்றீர்.

நீங்கள் சாதாரண
பெண் இல்லை அம்மா
சாதனைப் பெண்
அம்மா என்றார்
சரவணன்.

என் இரண்டாவது
பெண் விளையாட்டுல
ஜெயிச்சு நிறைய
கப்பெல்லாம் வாங்கி
இருக்கா.
பள்ளியில் அவள்தான்
முதல் மார்க்.
எந்தப் போட்டி வைச்சாலும்
ஜெயிச்சிடுவா.
ஆனால் அவளை
விளையாட்டுக்கு
வேறு எங்கும் அனுப்ப
வசதியில்லை என
இரண்டாம் மகள்
நந்தினியைப் பற்றி
கூறினாள் பொன்னுத்தாயி.
கிராமத்து பிள்ளைகளுக்கு
எல்லா திறமைகளும்
இருக்கு. ஆனால்
அதை வெளிக்கொணர்ந்து
முன்னேறுவதற்கான
வசதி வாய்ப்புகள்
இல்லை.
என்னைப் போல இன்னும்
எத்தனையோ அம்மாக்கள் ஏங்கித்
தவிக்கிறார்கள் தான்.
ஆனால் என்ன செய்ய
முடியும் என்றார்
பொன்னுத்தாயி.

கவலைப்படாதீங்கம்மா
உங்களைப் போல
தன்னம்பிக்கையுள்ள
அம்மாக்களையும்
அவர்களின் பெண்
பெண்பிள்ளைகளின்
திறமைகளையும்
வெளிக்கொண்டு வருவது தான்
இந்த வி. டிவியின் கடமை என்றார்
சரவணன்.

தேனீர் அருந்திய பின்
விடைப் பெற்றனர்
டி.வி குழுவினர்.

மூன்று நாட்கள் சென்ற பின்...
ஞாயிறு மாலை 6 மணிக்கு,
வணக்கம் நேயர்களே!
இது உங்கள் வி.டிவியின்
மாதம் ஒரு "கிராமமும்
சாதனைப் பெண்ணும்" என்ற
தலைப்பில் இந்த வாரம்
ஒளிப்பரப்பாக இருப்பது
நமது பூஞ்சோலை
கிராமத்தின்
சாதனைப் பெண்
பொன்னுத்தாயி.

இவரை பாரதி கண்ட
புதுமைப் பெண் என்றே
சொல்லலாம்.
இதோ உங்களுக்காக
அவரின் பேட்டி.

அம்மா... அம்மா
இங்க வாம்மா...
நீயும் டி.வியில
தெரியுற பாரும்மா...
என்றாள் மகள் ராஜி.
மாடுகளுக்கு வைக்கோல்
அள்ளிப் போட்டுக்கொண்டிருந்த
பொன்னுத்தாயி
ஓடி வந்தார் டிவி முன்.

என்ன நேயர்களே!
எல்லா தொலைக்காட்சிகளிலும்
இன்று பரப்பரப்பாக
பேசப்படும் ஒரே செய்தி
ஒலிம்பிக்கில் சாதனைப்
படைக்கும் பெண்களை
மட்டுந்தான். ஆனால்
நம் வி.டிவி மட்டும் தான்
கிராமங்களில் சத்தமில்லாமல்
சாதனைப் படைத்துக்
கொண்டிருக்கும்
பெண்களை உங்கள்
முன் நேரிடையாக
பேச வைத்து, அவர்களது
திறமைகளை
வெளிக்கொணர்வதால்,
எத்தனையோ திறமைகளை
தங்களுக்குள்ளேயே
புதைத்துக் கொண்டு
வாய்ப்புகளை இழந்துக்
கொண்டிருக்கும்
பெண்களுக்கு ஒரு
தன்னம்பிக்கையை
ஊட்டுவதாக இருக்கும்.
இன்னும் இதுப்போல்
எத்தனையோ
பொன்னுத்தாயிகள்
தனித்துப் போராடி
பெண் பிள்ளைகளைப்
படிக்க வைத்து
அவர்களுக்கென்று ஒரு
அடையாளத்தைத்
தேடித்தர அரும்பாடுப்
பட்டுக்கொண்டிருக்கின்றனர்.
இவர்களைக் கண்டறிந்து
உறுதுணையாக இருப்பதே
நம் வி.டிவியின்
நோக்கமாகும்.
"பெண்களைப் போற்றுவோம்
"கண்களாய் காப்போம்" எனக் கூறி
மீண்டுமொரு சாதனைப் பெண்
நிகழ்ச்சியில் சந்திக்கும் வரை
உங்களிடமிருந்து
விடைப் பெறுவது
உங்கள் சரவணன்
நன்றி... வணக்கம்.

ஒரு வாரம் கழித்து...
ஒரு காலை நேரம்
அம்மா வணக்கம்.
நாங்கள் "ஸ்போர்ட்ஸ்
அகாடமி" என்ற அமைப்பில்
இருந்து வருகின்றாம்.
சென்ற ஞாயிறு அன்று
வி.டிவியில் உங்கள்
பேட்டியைப் பார்த்தோம்.
உங்கள் இரண்டாவது
மகளுக்கு விளையாட்டில்
ஆர்வம் இருப்பதாக
சொன்னீர்கள்.

வாய்ப்பும், வசதியும்
இல்லாமல் திறமைசாலிகள்
சோர்ந்து மனம் தளராமல்
இருக்க வேண்டும்
என்ற நோக்கத்தில்
எங்கள் அமைப்பு
உங்கள் மகளுக்கு
உதவ முன்வந்துள்ளது.
நன்றாக பயிற்சியும்
உணவு, உடைகள் என
அனைத்தையும்
எங்கள் அமைப்பு
செய்யத் தயாராக
உள்ளது என கூறினார் அகாடமி
தலைவர் பாஸ்கரன்.

செய்வதறியாது
ஆனந்தக் கண்ணீருடன்
இருகரம் கூப்பி நன்றி
கூறி அகாடமி உதவியை
ஏற்றுக்கொண்டார்
பூஞ்சோலை பொன்னுத்தாயி.

முற்றும்.

எழுத்தாளர்,
மு. ஜெரோஷா,
திருப்பூர்.

## வானவில் கவிபாடும்

இருப்பதற்கு யாருமில்லை..
இழப்பதற்கு ஏதுமில்லை..

கேள்வி மட்டும் வாழ்க்கையிலே..
கேளிச் செய்யும் சமூகத்தில்..

தோல்விக் கண்டு பயமேனோ?
தோற்றுப் போகும் தோல்விக் கூட..

மனம் தளர வேண்டாமே..
இனம் மிளிர வேண்டுமே..

துணிவு மட்டும் துணையாக..
துணிந்து நின்று போராடு..

வரவேற்கும் வருங்காலம்..
இனி வாழ்வில் பொற்காலம்..

வழி தேடும் பயணத்தில்..
செல்லும் இடமெல்லாம் வழியாக்கு..

வானமழை கவிபாடும்..
வானவில்லும் வாழ்த்துரைக்கும்..



—
வாழ்வியல் கவி,
சா. நாகூர் பிச்சை,
திண்டுக்கல்.

# வ.உ. சிதம்பரம் பிள்ளை (தியாகத்திற்கெல்லாம் மணிமகுடமாக அமைந்த ஒரு போராளியின் வாழ்க்கை சரிதம்)

இந்திய விடுதலை பல்வேறு மனிதர்களின் துயரங்களையும், நெருக்கடிகளையும், நிர்பந்தங்களையும் உள்ளடக்கியது. நாட்டு நலனுக்காக தங்கள் வாழ்வையே அர்ப்பணித்தவர்கள் அவர்கள். தேசிய நீரோட்டத்தில் கலந்திருந்தாலும் அவர்களின் மொழி மீதான பற்று அளவிடமுடியாதது. நமக்கு சுவர்க்கம் எனும் சுதந்திரக்கதவு திறக்க அவர்கள் நரகத்தில் வீழ்ந்துபட்டனர். வெள்ளைக்காரர்களிடம் சுதந்திரத்தைத் தவிர எந்த சமரசத்துக்கும் உடன்படாதவர்கள். சித்ரவதை செய்தாலும் பயமுறுத்தினாலும் கொண்ட வைராக்கியத்தைக் கைவிடாதவர்கள். பாரதியார், சிவா போன்று தேசத்தை உயிரென மதித்தவர் சிதம்பரம் பிள்ளை. தமிழக இளைஞர்கள் வெள்ளையரை எதிர்த்து வீதியில் இறங்கிப் போராடுவதற்கு துணிந்தார்களென்றால் அதற்கு சிதம்பரம் பிள்ளையின் பேச்சும் ஒரு காரணம். தமிழக மக்களை அடக்குமுறைகளால் ஒடுக்கிவிட்டோம் என்று வெள்ளையர்கள் கருதினாலும் தமிழக மக்களிடையே விடுதலை உணர்வு நீரு பூத்த நெருப்பாக கனன்று கொண்டிருந்தது. தானும், தன் மக்களும் வாழ்ந்தால் போதும் என்ற சுயநலமில்லாமல் விடுதலைப் போராட்டத்துக்காக தனது வாழ்க்கையையே விலையாகக் கொடுத்தனர்.

தமிழகத்தின் முதல் தொழிலாளர் தலைவர் சிதம்பரம் பிள்ளை. சாதிய உணர்வை வளர விட்டோமானால் நாடு விடுதலை பெற இன்னும் ஒரு நூற்றாண்டு ஆகும் என்றவர். வழக்கறிஞராக கட்டணத்தைப் பெற்றுக் கொள்ளாமல் பாதிக்கப்பட்டவர்களுக்காக நீதிமன்றத்தில் வாதாடியவர் சிதம்பரம் பிள்ளை. சப்-மாஜிஸ்திரேட் ஏகாம்பரம் என்பவர் லஞ்சம் வாங்கியதாக வழக்கு தொடுத்து தண்டனையைப் பெற்றுத் தந்த சிதம்பரத்தை அதிகார வர்க்கம் பரம எதிரியாக பாவித்தது, தன்னுடைய இருபத்தியோராம் வயதில் திலகரின் தலைமையை ஏற்றார். குட்டக் குட்ட குனிந்து கொண்டிருந்தால் இன்னும் கால் நூற்றாண்டு காலம் இந்தியாவுக்கு இருண்டு போய்விடும் என்றார். கண்ணுக்கு கண், பல்லுக்கு பல் என்பதே சிதம்பரம் பிள்ளையின் தாரக மந்திரமாக இருந்தது. மதுரையிலிருந்து வெளிவந்த விவேகபாநு இதழில் சுதேசாபிமானம் என்ற அரசியல் கட்டுரையை 1906இல் எழுதினார். ஒருநாளில் பதினெட்டு மணிநேரம் நாட்டுக்காக தன்னலத்தை விட்டொழித்து உழைத்தார். அவருடைய கனவெல்லாம் இந்தியா சுந்திரமடைய வேண்டும் என்பதே. தேசத்தின் தலையெழுத்தையே மாற்றிக் காட்டியவர்களில் முக்கியமானவர் சிதம்பரம் பிள்ளை. எதையும் பிச்சையாக கேட்பது அவமானம் என்று கருதியவர். மிதவாதம் விடுதலைப் போராட்டத்தை ஆமை வேகத்தில் நடத்திச் செல்லும் என்றவர்.

தேசத்தின் தலைவிதி இருபெரும் போராளிகளை சந்திக்க வைத்தது. சென்னைக்கு வந்த சிதம்பரம் பிள்ளை இந்தியா இதழ் அலுவலகத்தில் பாரதியாரை முதல் முதலில் சந்தித்தார். அந்தச் சந்திப்பைப் பற்றிக் குறிப்பிடும் போது என் உள்ளத்தில் மின்மினி போல ஒளிவிட்டுப் பிரகாசித்தது என்று குறிப்பிட்டார். பாரதியார் சகோதரி நிவேதிதை அம்மையார் சந்திப்பு எந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததோ அதைவிட முக்கியத்துவம் வாய்ந்தது பாரதியார் சிதம்பரம் பிள்ளை சந்திப்பு. அணைந்த விளக்கு அருகில் தீயைக் கொண்டு சென்றால் திடீரென்று திரி பற்றிக் கொள்ளுமே அதுபோல. இருகரம் தானே ஓசை எழுப்பும். சிதம்பரம் பிள்ளையும், பாரதியாரும் தேசத்தின் ஆன்மாவை எழுச்சி பெறச் செய்தனர். இருவரும் திலகரை தலைவராக ஏற்றுக் கொண்டவர்கள். பேனா முனை தேசத்தின் தலையெழுத்தையே மாற்றிக் காட்டியது. சிதம்பரம் பிள்ளை ஆரம்பித்த சுதேசி பண்டகசாலை, தரும நெசவு சங்க சாலை, ஜனசங்கம் ஆகியவற்றால் தூத்துக்குடியே வெந்து தணிந்தது. அக்காலகட்டத்தில் கடல் வாணிகத்தில் வெள்ளையரின் கொடியே பறந்தது. கப்பல் வணிகத்தில் வெள்ளையரை மண்ணைக் கவ்வச் செய்யவேண்டுமென்பதே சிதம்பரம் பிள்ளையின் எண்ணம். அந்தக் கனவுத்திட்டம் அவரை உறங்காமல் செய்தது. சிங்கத்தை அதன் குகையிலேயே சந்திப்பது போல சிதம்பரம் பிள்ளையின் தளராத முயற்சியால் சுதேசி ஸ்டீம் நேசிகேஷன் கப்பல் கம்பெனி 1906 அக்டோபர் 16இல் உருவானது.

வணிக ரீதியாக வெள்ளையரைத் தோற்கடித்தால் அவர்களின் கொட்டம் அடங்கும் என்பதே சிதம்பிரம் பிள்ளையின் எண்ணம். பங்கு ஒன்றுக்கு இருபத்துஐந்து ரூபாய் வீதம் நாற்பதாயிரம் பங்குகள் திரட்டப்பட்டன. வேண்டிய மூலதனம் திரட்ட பம்பாய், கல்கத்தா, சென்னை, மதுரை என்று சோர்வுறாமல் சுற்றினார். கப்பலுடன் வருவேன் இல்லையெனில் கடலில் விழுந்து உயிரை மாய்த்துக் கொள்வேன் என சூளுரைத்து பம்பாய் சென்றார் சிதம்பரம் பிள்ளை. சிதம்பரம் பிள்ளை தன் முடிவிலிருந்து பின் வாங்குபவரல்ல. சோதனைகளால் துவண்டு போபவருமல்ல. கடலே ஆர்ப்பரித்து வந்தாலும் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடுபவரல்ல. அவர் பம்பாயில் இருந்த போது அவரது மகன் உலகநாதன் நோய்வாய்ப்பட்டு மரணமடைந்தான். மனைவியோ நிறைமாத கர்ப்பிணியாகச் சிரமப்பட்டார். சூழ்நிலைகளால் நெருக்கடிக்கு உள்ளான போதும் சிதம்பரம் பிள்ளை மனம் தளரவில்லை. இறைவன் துணை நிற்பான் என கடிதம் எழுதிவிட்டு தன் காரியத்தில் மூழ்கினார். கிழக்கில் கதிரவன் உதிப்பதும் மேற்கில் மறைவதுமாக நாட்கள் கடந்து சென்றன. காரியம் கைகூடாமல் போய்விடும் நிலை வந்தும் கூட சிதம்பரம் பிள்ளை துவண்டுவிடவில்லை. தன் தலையை அடமானம் வைத்தாவது கப்பலை தூத்துக்குடிக்கு கொண்டுவந்து விடவேண்டும் என உறுதிபூண்டு முனைப்புடன் செயல்பட்டார். எஸ்.எஸ். காலியோ, எஸ்.எஸ். லாவோ என்ற இரண்டு கப்பல்கள் தூத்துக்குடி வந்துசேர்ந்தன.

விதியின் செயல்பாடு சூட்சுமமானது. ஒரு செயலைச் செய்ய இன்னாரைத் தேர்ந்தெடுப்பதில் வல்லமை மிக்கது. வாழ்நாளில் நாங்கூழ்ப் புழுவென நசுக்கப்பட்டவர்களை வரலாறு தன் வாரிசாக்கிக் கொள்கிறது. அவர்கள் பட்ட

துயரத்துக்கும், அடைந்த வேதனைக்கும் காலம் கூலி கொடுக்கிறது. ஒரு நாட்டையும், இனத்தையும் அடிமைப்படுத்துவது என்பது படைத்தவனுக்கு விடப்பட்ட சவால். சொந்த நாட்டில் உரிமைகள் மறுக்கப்படுவது மரணத்தைவிடக் கொடுமையானது. என்ன சம்பவம் எதற்கு நம்மை இட்டுச் செல்லும் என்பதை கடவுள் மட்டுமே அறிவார். ஆன்மீக நம்பிக்கையில் ஊறிய பாரத நாட்டை கத்தியின்றி ரத்தமின்றி அடிமைப்படுத்த முடிந்தது. பாரதத்தில் ஆன்மீகமே முதன்மைபடுத்தப்படுகிறது அரசியல் இரண்டாம் பட்சமே. இந்தியாவில் வயலில் கூலி வேலை செய்பவன் கூட தத்துவம் பேசுவான். வேதங்களையும், கீதையையும் அறிந்தவனாக இருப்பான். போராளிகளுக்கு வாழ்க்கை கசக்கும் மரணம் இனிக்கும். அவனால் இராமன் ஆண்டால் என்ன இராவணன் ஆண்டால் என்ன  என்று துண்டை உதறி தோளில் போட்டுக் கொண்டு போய்விட முடியாது. நாட்டை வெல்பவனைவிட தன்னை வெல்பவனே வல்லமை மிக்கவன். உன் பேச்சுக்கு மதிப்பிருக்கிறது உனக்கு பின்னால் கூட்டம் கூடுகிறதென்றால் நீ சத்தியத்தின் வழியில் காலடி எடுத்து வைத்திருக்கிறாய் என்று அர்த்தம். தேசம் என்பது வெறும் மண்ணும், மலையும், மரமும் அல்ல மக்கள்.

காங்கிரஸை மிதவாதிகளிடமிருந்து கைப்பற்றி விடவேண்டும் என்று திலகர் தலைமையில் தீவிரவாதிகள் முடிவெடுத்தனர். 1907ல் சூரத் காங்கிரஸ் மாநாட்டில் பாரதி உள்ளிட்டோரை சிதம்பரம் பிள்ளை தனது சொந்த செலவில் அழைத்துச் சென்றார். மாநாட்டில் கலவரம் வெடித்தது. மிதவாதிகள் தேசத்தை மண்ணில் புதைத்து மக்கச் செய்துவிடுவார்கள் என்றார் திலகர். ஒரு தேசமோ ஒரு அமைப்போ குட்ட குட்ட குனிகிறதென்றால் அங்கு வசிக்கும் மக்கள் அல்லது அந்த அமைப்பில் உறுப்பினர்களாக உள்ளவர்கள் சுரணை அற்றவர்கள் என்று அர்த்தமாகிவிடும் என்றார். நான் கையில் எந்த ஆயுதம் ஏந்த வேண்டும் என்பதை எதிரியே தீர்மானிக்கிறான் என்றார் திலகர். யுத்தம் நீதிக்கு புறம்பானது என்றால் கிருஷ்ணன் ஏன் பாண்டவர்களை குருட்ஷேத்திர போருக்கு அழைத்துச் சென்றான். காண்டீபத்தை நழுவவிட்ட அர்ச்சுனனுக்கு ஏன் கீதையை வழங்கினான். சத்திரியன் ஆயுத்தை விட்டெறிந்து போர்க்களத்தில் புறமுதுகிட்டு ஓடினான் என்ற அவப்பெயரை விட அவன் சாவதே மேல் என்றார் திலகர். கொள்கை வேறுபாடு காரணமாக காங்கிரஸைவிட்டு வெளியேறி திலகர் தேசியக்கட்சியைத் தொடங்கினார். சென்னை மாகாணத்திற்கு அக்கட்சியின் செயலாளராக சிதம்பரம் பிள்ளை பொறுப்பேற்றார்.

தூத்துக்குடியில் இயங்கி வந்த கோரல் மில் தொழிலாளர்களை நசுக்கியது. காலை  ஆறு மணியிலிருந்து மாலை ஆறுமணிவரை வேலை செய்ய கட்டாயப்படுத்தியது. வார விடுமுறை இல்லை, பிரம்படி, மிகக் குறைந்த ஊதியம், உழைப்புச் சுரண்டல், தண்டனை என்ற பெயரில் சித்ரவதை, தொழிலாளர்களை கூலிகள் என உதாசீனப்படுத்துவது. இத்தகைய அடக்குமுறையை எதிர்த்து 1800 தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். வந்தே மாதரம் என முழக்கமிட்டவாறு சாலைகளில்

அணிவகுத்தனர். 27.2.1908ல் தொடங்கி எட்டு நாட்கள் வேலை நிறுத்தம் நடைபெற்றது. தூத்துக்குடி நகரமே வெள்ளையரை எதிர்த்து ஒன்றுதிரண்டது. சிதம்பரம் பிள்ளையின் முதல் வேலை நிறுத்தம் வெற்றி கண்டது. வெள்ளையர்கள் இறங்கி வந்தனர். அரை மடங்கு சம்பள உயர்வு, ஞாயிறு விடுமுறை, உணவு இடைவேளை, அவசர காலத்தில் கூலியின்றி விடுப்பு என்று சமரசத் தீர்வு எட்டப்பட்டது. சிதம்பரம் பிள்ளையும், சுப்ரமணிய சிவாவும் தங்களது அனல் பறக்கும் பேச்சால் நெல்லையில் உள்ள இளைஞர்கள் உள்ளத்தில் தேசப் பற்றை கிளர்ந்தெழச்செய்தனர். வங்கம் தந்த மாவீரன் விபின் சந்திரபால் நீதிமன்ற அவமதிப்புக்காக ஆறுமாதம் சிறை சென்று விடுதலையான நாளை சென்னையில் பாரதியாரும், தூத்துக்குடியில் சிதம்பரம் பிள்ளையும் கொண்டாட முடிவு செய்தனர். தூத்துக்குடியில் திரண்ட கூட்டத்தை வெள்ளைய சிப்பாய்களால் அடக்க முடியவில்லை.

போராட்டத்தை ஒடுக்க வெள்ளைய அரசு சிதம்பரம் பிள்ளை, சிவா, பத்மநாப ஐயங்கார் மூவரையும் கைது செய்து பாளையங்கோட்டை சிறையில் அடைத்தது. இந்த காட்டுத்தீ போல் பரவியது. தூத்துக்குடியே சூரையாடப்பட்டதுபோல் காட்சியளித்தது. எங்கு திரும்பினாலும் பேரணியும், ஆர்ப்பாட்டங்களும் கொளுந்துவிட்டெரியும் அரசாங்க அலுவலகமும், காவல் நிலையமும் என்று தூத்துக்குடியே கலவரபூமியானது. கலவரத்தை ஒடுக்க வேறுவழியின்றி கலெக்டர் விஞ்ச் துப்பாக்கிக சூட்டுக்கு ஆணையிட்டார். நான்கு உயிர்கள் பறிபோனது. இருந்தும் வெள்ளை அரசுக்கு தூத்துக்குடி நகரம் ஒத்துழைக்க மறுத்தது. வ.உ.சிக்கு ஆதரவாக தொழிற்சங்கங்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். வ.உ.சி நாட்டுக்காக போராடியரை தேசத் துரோகம் என்றார் நீதிபதி ஏ.எஃப். பின்ஹே அவருக்கு இரட்டை ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. நாற்பது ஆண்டுகால சிறைத்தண்டனையை பெற்றபோது வ.உ.சியின் வயது முப்பத்துஐந்து. தீர்ப்பு தந்த அதிர்ச்சியில் வ.உ.சியின் தம்பி மீனாட்சிசுந்தரம் இறந்து போனார். வ.உ.சி சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ததன் விளைவாக நாற்பது ஆண்டுகால சிறைத்தண்டனை ஆறு ஆண்டுகளாக குறைக்கப்பட்டது. பின்னர் அவருடைய நன்னடத்தையின் காரணம் காட்டி மீண்டும் ஒன்றரை வருடங்கள் குறைக்கப்பட்டு நான்கரை ஆண்டுகளாக மாற்றப்பட்டது.

சிறையில் சிதம்பரம் பிள்ளைக்கு முரட்டுத் துணியிலான சட்டை வழங்கப்பட்டது. தலை மொட்டையடிக்கப்பட்டது. கைகளிலும், கால்களிலும் சங்கிலிகள் மாட்டப்பட்டன. எந்தவொரு சித்ரவதையும் சிதம்பரம் பிள்ளையின் மனஉறுதியைக் குலைக்கவில்லை. அந்த நிலையிலும் கல் உடைத்தார். சிறைச்சாலை அவரை ஊமையாக்கியது அருடைய சிந்தனையை முடக்கியது என்றாலும் அவருடைய போராட்டக் குணம் மாறவே இல்லை. தேசத்தின் விடுதலைக்காக அனைத்தையும் சகித்துக் கொண்டார். சிதம்பரம் பிள்ளையின் துணிச்சலைக் கண்டு வார்டன் கோபமடைந்தான். கல் உடைத்தது போதும் சணல்கிழி இயந்திரத்தில் வேலை செய்யுமாறு வார்டன் ஆணையிட்டான். பாரதத்தாயின் அடிமை விலங்கு உடைபடுமென்றால் மலையிலிருந்து கீழே விழச் சொன்னாலும் விழுவேன் என்றார்

சிதம்பரம் பிள்ளை. வீண் சவடால் வேண்டாம் கொடுக்கப்பட்ட உத்தரவுக்கு கட்டுப்படு என்றான் வார்டன். வந்தே மாதரம் என்று கோஷமிட்டுக் கொண்டே சணல் கிழிக்கத் தொடங்கியபோது அவரது கையில் தோலுரிந்து ரத்தம் கசியத் தொடங்கியது. அத்தகைய வேதனையையும் தாங்கிக் கொண்டு அவர் வந்தேமாதரம் என்று முழங்கினார். எனக்காக யாரும் இரக்கப்படத் தேவையில்லை என் உயிர், பொருள், ஆவி அனைத்தையும் தாய் நாட்டின் விடுதலைக்காக இழக்கக்கூடிய சூழ்நிலை வந்தால் யோசிக்கவே மாட்டேன் என்றார்.

சணல்கிழி இயந்திரத்தில் வேலை பார்த்து கைத்தோல் உரிந்ததைப் பார்த்தும் மனம் இறங்காத சிறை பாதுகாவலர் சிதம்பரம்பிள்ளையை செக்கினை இழுக்கப் பணித்தான். மாடு இழுக்கும் செக்கினை சிதம்பரம் பிள்ளை தனியொருவராக சவுக்கடி பெற்றுக்கொண்டே செக்கினை இழுத்தார். அரக்க குணம் படைத்த சிறை பாதுகாவலர் செக்கினை மெதுவாக இழுக்கிறாய் என கூறிக் கொண்டே பிரம்பால் முதுகில் அடித்தான். சிதம்பரம் பிள்ளையின் உடலெங்கும் ஆறாத இரத்தக் காயங்களாய் இருந்தன. இதற்கும் மேலாக கெட்டுப் போன உணவை உட்கொண்டதால் சிறைவாசத்தில் சிதம்பரம் பிள்ளையின் உடல் நலிவுற்று ஒன்பது கிலோ எடை குறைந்தார். கோவை கண்ணனூர் சிறையில் நான்கரை ஆண்டுகள் கடுந்துன்பத்தைத் தாங்கி 1912 டிசம்பர் 24அன்று வ.உ.சி விடுதலையானார். அவரை வரவேற்க தமிழகமே திரண்டு வரும் என எதிர்பார்த்த ஆங்கிலேய அரசு விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருந்தது. ஆனால் அந்த தியாகச் செம்மலை வரவேற்க அவருடைய மனைவி, மக்கள், மைத்துனர், சுவாமி வள்ளிநாயகம், நண்பர் கணபதி, தொழுநோய் கண்ட சுப்ரமணிய சிவா இவர்களைத் தவிர வேறு யாரும் வரவில்லை. தேசத்துக்கா செய்யும தியாகங்களை மக்கள் உதாசீனப்படுத்துகின்றனர். தேசம் எப்போது தியாகிகளை மதிக்கத் துவங்குகிறதோ, அப்போதுதான் போராடிப் பெற்ற சுதந்திரத்தின் அருமை தெரிய வரும். இல்லையென்றால் நான்கு எல்லை இருந்தால் மட்டும் அது நாடல்ல பிணமெரியும் சுடுகாடுதான்.

—



ப.மதியழகன்,
115,வள்ளலார் சாலை,
ஆர்.பி.சிவம் நகர்,
மன்னார்குடி - 614001.
திருவாரூர் மாவட்டம்.
தமிழ்நாடு,
கைப்பேசி: 9597332952
பகிரி: 9384251845

# 01-கடிகாரம்

நேரம் காட்டாத போதும்
திருவிழா கடையில் விற்ற
கடிகாரத்தை ஆசையுடன்
பால்யத்தில் கட்டியதுண்டு

மிட்டாய் மாமாவிடம்
கொடுத்த காசில்
கையில் கவசமாய் நின்ற
மிட்டாய் கடிகாரத்தை
கடித்து சுவைத்ததுண்டு

பள்ளி செல்லும் சாலையில்
உயரத்தில் தொங்கிய
மணிக்கூண்டை
கண்சிமிட்டி கைகொட்டி
கடந்ததுண்டு

கால் வலித்தாலும்
சுற்றி சுற்றி வந்தே
முட்களாய் முளைத்தே
முன்னோக்கி நொடிகளாய்
முன்னேறிச் செல்கிறாய்

நேரமுடன் அலறிய அலாரத்தை
அணைத்துவிட்டுஉறங்கினேன்
நேரம் கழித்து விழிக்க...!
நேரமும் சரிந்து போனது
ஓரமாய் நின்றுசிரித்து போனது

முயற்சிகளின்முனையில்
நொடிகளின் பாதையில்
வண்ணம்பூசிய வண்ணத்துப்பூச்சியாய்
வட்டமிடுகிறேன் சிறிய பெரிய
முட்களின் நடுவில்....!

நேரங்கள் சிதறும்போது
பாரங்கள் பல்லிளிக்கிறது
ஒவ்வொரு முறை நீ
ஒலிக்கும் போதெல்லாம்
எனக்கான ஒலியாய்
சேமிக்கிறேன்.

பல்லியாய் சுவரில்
நின்றாலும் என்னில்
அவ்வப்போது அசரீரியாய்
உச் கொட்டிக் கொண்டுதான்
இருக்கிறாய்.

இதயத் துடிப்புகளாய்
முட்கள் நகரும்போது
நேரங்களின் வரிசையில்
காத்திருக்கிறேன்
எனக்கான நேரத்தை
பூர்த்தி செய்ய.....!

## 02-சலங்கை

பாதங்களை கட்டிய
செம்மொழியே..!
செவியில் குழைந்து
உன் ஒலியில் மயங்கியே
நடக்கிறது தமிழ் கூத்து...!

இரவை கட்டியவன்
விடியும் வரை
உன்னைக் கட்டியே
ஆடுகிறான் பெருங்கூத்தில்...!

அசையும் கால்கள்
ஆடி குதிக்கும்போதெல்லாம்
அழகிய மொழியில்
இசையைபிரசவிக்கிறாய்...!

உன் காதுகள்திறக்கும்போது
ஒலிகளெல்லாம்
ஒன்றிணைகிறது
காற்றில் தேடி அலைகிறது

தெம்மாங்கு பாட்டிசைக்க
குத்தாட்டத்தில் குதிக்கிறாய்
பரதத்தில் பண்ணிசைக்க
நளினத்தில் மிளிர்கிறாய்....!

தலை சூடிய கரகத்தில்
தலை கவிழாமல்
இறுக்கமாய் கால்களை
பற்றியே ஆடுகிறாய்
அழாது ஒலிக்கிறாய்
மெல்லிசையாய் பூக்கிறாய்...!

காற்றின் உடலை துளைத்து
பிய்த்துக் கொண்டு
ஊடுறுவிய ஒலிகள்
உன்வயிற்றில் லயித்த
சிறு கிள்ளையோ?

கால்களில்வீழ்ந்து கிடப்பதாலோ
தலைகணமின்றி
தலை சாய்க்க வைக்கிறாய்...!
லயத்தோடு மனம் துடிக்க
வைக்கிறாய்....!

பரதமும் கூத்தும்
நீ வாங்கிய பட்டமோ
வானில் அசைந்து
பூச்சொரிகிறது ஊனில்
நுழைந்து இசைக்கிறது...!

அரங்கேறுகிறாய்
சங்கீதமும் பேசுகிறது
மத்தளங்கள் மெட்டிசைக்க
நாளெல்லாம் பூக்கிறாய்
தமிழ் இசையாய்....!

—

ஞா. முனிராஜ்,
அருப்புக்கோட்டை.

# அப்பர்

தாயின் அன்பு
பூத்துக் குழுங்கும்
மலரைப் போன்றது

தந்தையின் அன்பு
பிறர் காண முடியாது
பூமிக்குள் மறைந்து கொள்ளும்
வேரைப் போன்றது

தனக்குள் ஓடும்
உதிரம் என்னும் நீர்மைக்கு
வேர் தான் காரணம் என்று
சிலசமயம் மரமும்
மறந்து போகிறது

மரம் மறந்தாலும்
வேர் நீரைப் பாய்ச்ச
மறப்பதில்லை

மகள்கள் எப்போதும்
அப்பா செல்லம்
ஆனால் மகன்கள்
ஆஸ்தி செல்வம்

தாயின் அன்பு கதகதப்பு
தந்தையின் அன்புக்கு பெயரே
கண்டிப்பு தான்

தாய் என்பவள் பெண்ணியம்
தந்தை என்பவர் கண்ணியம்

அவள் என்று அம்மாவை
அலட்சியமாக கவிதை
சொல்லிவிடுகிறது
அவன் என்று தந்தையை
ஒருபோதும் எழுதிவிட முடியாது
அவர் அப்பர்
சிலசமயம் தாயுமானவர்.

—

மு. ஆறுமுகவிக்னேஷ்,
சத்திரப்பட்டி,
விருதுநகர் மாவட்டம்.

# புலிபொறித்துப் புறம்போக்கி - பட்டினப்பாலைக் காட்டும் தமிழரின் ஏற்றுமதி இறக்குமதி வணிகம்

திறவுகோல் வாசகர்களுக்கு அன்பின் வணக்கங்கள். பாலைத் திணையையும், காவிரிப்பூம்பட்டினம் நகரின் வளத்தையும் ஒருங்கே கூறுவதால் பட்டினப் பாலை என வழங்கப்படும் பாலைப்பட்டை ஒவ்வொரு மாதமும் பருகி வருகிறோம். சென்ற வாரத்தின் தொடர்ச்சியாக பூம்புகார் பட்டினத்தில் இரவு நேர பொழுது எவ்வாறு இருந்தது என்பதை பட்டினப்பாலை வழி கண் கொண்டு காணலாம்.

இன்று வெயிலுக்கு பருத்தி , கொண்டாட்டத்திற்கு பட்டு , இரவு உடை,பகல் உடை என இவையெல்லாம் அறிந்த நவீன மக்கள் , நாகரீக மாந்தர்கள் நாம் தாம் என நம்மில் எத்தனை பேர் இருக்கிறோம்.

காவிரி பூம்பட்டினத்து வீடுகளில் மகளிர் காலத்திற்கேற்ற கோலம் பூண்டு கூடிக்களித்து இன்புற்றனர். கணவனோடு கூடித் திளைத்த மகளிர் வெளியிலோ, வீட்டிலோ கூடித் திளைக்கும்போதும், வெளியில் உலாவும்போதும் தாங்கள் அணிந்திருந்த பட்டு ஆடையை நீக்கி, பருத்தித்துணி வெள்ளை ஆடையை உடுத்தி முறையே உடுத்தியும், பட்டாடை உடுத்தியும் மகிழ்ந்தனர் என்கிறது பட்டினப்பாலை.

பட்டினப்பாலை காலத்து பெண்களுக்கும் காலத்திற்கேற்ற உடை அணியும் நாகரீகம் பெற்றிருந்தார்கள் என்றால் நாகரீகமடைந்த இனம் தமிழினம் என்பதற்கு இங்கு சான்று கிடைக்கின்றது.

காதலித்து பார் என்ற வைரமுத்து காதல் கவிதை மிகவும் பிரசித்திப் பெற்றது நாமறிந்தது. காதல் வயப்பட்டோரின் நிலையை சங்க இலக்கியங்கள் பலச் சுவைபட எடுத்தியம்பியுள்ளது.

வெளியில் உலாவும்போது மயக்கம் தராத மட்டுகள்ளைப் பருகியவர்கள் கூடித் திளைக்கும்போது மதுக்கள்ளை உண்டு மகிழ்ந்தனர். மட்டு (சுவைநீர்) மதுமகிழ் (களிப்புநீர்) பருகல் - வெளியில் உலாவும்போது மயக்கம் தராத மட்டுகள்ளைப் பருகியவர்கள் கூடித் திளைக்கும்போது மதுக்கள்ளை உண்டு மகிழ்ந்தனர். மாலை மாற்று விளையாட்டு - மைந்தர் தலையில் சூடியிருந்த கண்ணி மகளிர் தலைக்கு மாறிவிட்டது. மகளிர் கழுத்தில் அணிந்திருந்த மாலை மைந்தர் கழுத்துக்கு மாறிவிட்டது.

வளைந்த படகுகளையுடைய மீன் பிடிக்கும் பரதவர்கள் நிலாமுற்றத்தில், உயர்ந்த கால்

நட்டுக் கட்டப்பட்டிருந்த மாடங்களில் கூடிக் களித்த காதலர் கடலில் விளக்கு ஒளியோடு மீன் பிடித்துக் கொண்டிருக்கும் திமில்களில் எரிந்த விளக்கொளிகளை எண்ணிக் கணக்குப் போட்டு மகிழ்ந்து கொண்டிருந்தனர். காவிரி மணலில் வெண்ணிலாவின் பயனைத் துய்த்துக் கொண்டிருந்த மக்கள் அங்கு மேடையில் இருந்து பாடப்பட்ட பாட்டுகளைக் கேட்டு மகிழ்ந்தனர். நாடகங்களைக் கண்டு மகிழ்ந்தனர். பார்த்துக்கொண்டும், கேட்டுக்கொண்டும் அந்த மணல் வெளியிலேயே தூங்கிவிட்டனர்.

அந்த வகையில் சொர்க்கத்துக்கு நிகரான பூம்புகார் பட்டினத்திலே, மனம் மயங்கும் இரவிலே காதலர்களின் நிலைமையை பின்வருமாறு காட்டுகிறது.

துணைப் புணர்ந்த மட மங்கையர்
பட்டு நீக்கித் துகில் உடுத்தும்,
மட்டு நீக்கி மது மகிழ்ந்தும்,
மைந்தர் கண்ணி மகளிர் சூடவும்,
மகளிர் கோதை மைந்தர் மலையவும்,
நெடுங்கால் மாடத்து ஒள் எரி நோக்கிக்
கொடுந்திமில் பரதவர் குரூஉச்சுடர் எண்ணவும்,
பாடல் ஓர்த்தும், நாடகம் நயந்தும்,
வெண் நிலவின் பயன் துய்த்தும்,
கண் அடைஇய கடைக் கங்குலான்
மாஅகாவிரி மணங்கூட்டும்
தூஉவெக்கர்த் துயில் மடிந்து106- 117)

நம்மூரில் நடக்கும் திருவிழா காலங்களையும் , இன்று கடற்கரை சித்திரங்களையும் காட்சிபடுத்தும் இவ்வரிகள் நாகரீகமடைந்த ஓர் இனத்தின் , இன்று மேலை நாடுகளில் நாம் காணும் காட்சிகளை ஒத்திருப்பதைக் காணலாம்.

சொர்க்கம் போல விளங்கிய காவிரியாற்றுக்கறை, மணமுடைய பூக்களை அடித்து வருவதால் பூக்களின் மணம் கமழ்ந்தது.செம்படவர்களும் , பரதவர்களும் பல்வேறு விளையாட்டுக்களில் ஈடுபட்டுக் களிப்புற்று கிடந்த கடற்கரை மணலில் சுங்கவரி அதிகாரிகளும் படுத்திருந்தனர்.

சங்க காலத்தில் உலக சிறப்பு வாய்ந்த துறைமுகம் சோழர்களின் புகார் என்ற காவிரிப்பூம்பட்டின துறைமுகம். இதைப்பற்றி தலாமி தன் குறிப்பில் இந்த துறைமுகத்தை சபரிஸ் என்று குறிப்பிட்டுள்ளார்.இந்திய கடற்படையில் வேலைசெய்த, வரலாற்று அறிஞர் நரசய்யா என்பவர் கடல்வழி வணிகம் என்ற புத்தகம் எழுதியுள்ளார். அதில் அவர் ஒரு கப்பல் துறைமுகத்தில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கு எடுத்துக்கொள்ளும் நேரம்

பொறுத்தே அந்த துறைமுகத்தின் மதிப்பீடு உயரும். குறைந்த நேரத்தில் இவற்றை முடிக்க அந்த துறைமுகத்தின் உள்கட்டமைப்பு சரியாக இருக்க வேண்டும். புகார் துறைமுகம் அத்தகைய சிறப்பு வாய்ந்த துறைமுகம் என்கிறார் .

வணிகப் பொருள்கள், குறிப்பாக வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் நுகர்வுப்பொருள்கள் மீது விதிக்கப்படும் வரியே உல்கு அல்லது சுங்க வரி என்று கருதப்படுகிறது.

சுங்கம் என்ற சொல் சுல்கம் என வடமொழியில் வழங்குகிறது. இது உல்கு என்ற வடிவில் சங்க இலக்கியங்களிலும் திருக்குறளிலும் குறிப்பிடப்படுகின்றது.

உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்

மிகுதியாக உற்பத்திய செய்யப்பட்டு இயற்றிய பொருட்செல்வம், அரசு நடத்தும் தொழில்களில் இருந்து பெறப்படும் வருவாய் / இலாபம், வர்த்தகத்தில் இருந்து பெறப்படும் வரி, பொருள் போக்குவரத்தில் இருந்து பெறப்படும் சுங்கவரி, பகைவரை வென்று அவர்களிடம் இருந்து பெறப்படும் திறைப்பணம் ஆகியவை அரசுக்கு / நாட்டிற்கு சொந்தமாகும் என்கிறது திருக்குறள்.

கழுதைச் சாத்தொடு வழங்கும் உல்குடைப் பெருவழி எனப் பெரும்பாணாற்றுப்படையும் (வரி 80-81) குறிப்பிடுவதிலிருந்து இக்கருத்து சரியானதே எனத் தெரிகிறது.

கொத்துக்கொத்தாக வெண்மையாக பூக்கக்கூடிய மடல்களை கொண்ட தாழை மரங்களை பொருந்திய கடற்கரையின் அகன்ற தெருக்களில் அரசனின் பொருளை காக்கும் உல்கு தொழில் செய்வோர் இச்சுங்கவரியை பெறுகின்றனர்.வெப்பத்தினை செலுத்தும் ஆதவனின் குதிரைகள் போன்று நாள்தோறும், சோம்பல் இல்லாது நாடெங்கும் தொய்வின்றி சீராக சுங்க வரி வசூலிக்கும் வேலை நடக்கிறது.இதனை பின்வரும் வரிகளின் மூலம் அறியலாம்.

வாலிணர் மடற்றாழை
வேலாழி வியந்தெருவின்
நல்லிறைவன் பொருள்காக்கும். 120
தொல்லிசைத் தொழில்மாக்கள்
காய்சினத்த கதிர்ச்செல்வன்
தேர்பூண்ட மாஅபோல
வைகல்தொறும் அசைவின்றி

*உல்குசெயக் குறைபடாது*

*இவ்வாறு இடைவிடாத வேலை நடக்கும் பூம்புகார் துறைமுகத்தில் வந்து குவியும் அளவற்ற பண்டங்களின் அளவு(வரம்பு) குறித்துப் பட்டினப்பாலை கீழ்கண்ட வரிகள் விளக்குகிறது.*

*வான்முகந்தநீர் மலைப்பொழியவும்*
*மலைப்பொழிந்தநீர் கடற்பரப்பவும்*
*மாரிபெய்யும் பருவம்போல*
*நீரினின்று நிலத்தேற்றவும்*
*நிலத்தின்று நீர்ப்பரப்பவும*
*அளந்தறியாப் பலபண்டம்*
*வரம்பறியாமை வந்தீண்டி*

*கடலிலிருந்து நிலத்திற்கு ஏற்றவும், நிலத்திலிருந்து கடலுக்கு பரப்பவும், அளந்து அறிய முடியாத பல பொருட்கள் எல்லை இல்லாது வந்து குவிந்து கிடக்கிறது. இக்காட்சியானது, பருவமழை பொழியும் காலத்தில் முகில்(மேகம்), கடலிலிருந்து முகந்த நீரை மலைமேல் பொழியவும் மலையில் விழுந்த மழைநீரை ஆறுகள் மூலம் கடலில் கொண்டு சேர்ப்பது போன்று காணப்படுகிறது. மேகத்தில் இருந்து பூமியை வந்தடையும் மழைநீர் அருவியாகி, ஆறாகி நீண்ட தன் பயணத்தின் இறுதியில் கடலில் சேர்க்கிறது. கடலில் கலந்த மழைநீர் மீண்டும் மேகமாக உருமாறுவதுமாக நிகழும் மழை பெய்வதற்கான நிகழ்வை உதாரணமாக கூறியிருப்பது, வானியலில் தமிழர்களுக்கு இருந்த அறிவை பறைசாற்றுகிறது.*

*இங்கனம் குவிந்த பொருட்களை பூம்புகார் துறைமுகத்தை சேர்ந்த அலுவலர்கள் வந்து பார்வையிடுகின்றனர்; அவற்றின் மதிப்பை அளவிடுகின்றனர். பொருளின் மதிப்பென்பது எப்பொழுதும் ஒரு நிலையாக இருப்பதில்லை. அங்ஙனம் இருக்கவும் இயலாது. அப்பொருளுக்கு இருக்கும் அவசியத்தைப் (demand) பொறுத்து அதன் மதிப்பும் (Value) மாறுபடும் என்பது நாமறிந்ததொன்று. எனவே, அதன் அவசியத்தை, அன்றைய சோழநாட்டில் அப்பொருளின் தேவை எத்தகையது என்று, பொருளின் மதிப்பை ஆராய்ந்த சுங்க அலுவலர், அப்பொருளுக்கு ஏற்றமுறையில் சுங்கம் விதிக்கிறார்; இவ்வாறு சுங்கவரி விதித்து வெளிநாட்டு வாணிகத்தைக் கட்டுப்பாடு செய்கிறார். சுங்கவரி விதிக்கும் இச்செயல் தினந்தோறும் ஓய்வின்றி நடைபெறுகிறது. இதனைச் செய்பவரும் மனத்தாலும் உடலாலும் வலிமை பெற்றவர்.*

*அங்ஙனம் சுங்கம் வசூலித்தமைக்கு அடையாளமாக ஏற்றுமதிக்காகவும், இறக்குமதியிலிருந்தும் வந்த மதிப்பு மிக்க பொருள்களின்மீது சோழநாட்டு இலச்சினையாகிய புலிச் சின்னம் பொறித்து, அவை மற்ற மூட்டைகளோடு கலந்துவிடாதபடியும், கொடி பொறிக்கப்படாதவை நாட்டினுள் நுழையாமலும்*

கண்காணித்துக் கொடி பொறித்த மூட்டைகளை பொதிமூட்டைகளாகக் கட்டிக் மிகவும் காவல் பொருந்திய பாதுகாவலான காப்பகத்தில் அவை அடுக்கப்பட்டன. உடல் வலிமையைக் கண்ட மாத்திரத்திலேயே அச்சம் தரும் காவலாளிகள் அவற்றைப் பாதுகாத்தனர்.காவிரிப்பூம்பட்டினம் துறைமுகத்தில் சுங்கம் வசூலிக்கும் அதிகாரி மனத்தாலும் உடலாலும் வலிமை பெற்றவராக உள்ளார்.

மழைமேகங்கள் விளையாடும் மலையுச்சியிலும் மலையிடைப் பிளவுகளிலும் வருடை என்னும் வரையாடு ஏறி விளையாடுவது போல வேட்டையாடும் ஆண் நாய்களும், முட்டித் தாக்கும் செம்மறியாட்டுக் கடாக்களும் முற்றங்களில் அடுக்கியுள்ள மூட்டைகளின் மேல் ஏறித் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தன.

இதனை பின்வரும் பட்டினப்பாலை வரிகள் அழகாக விளக்குகிறது.

அருங்கடிப் பெருங்காப்பின்
வலியுடை வல்லணங்கினோன்
புலிபொறித்துப் புறம்போக்கி
மதிநிறைந்த மலிபண்டம்
பொதிமூடைப் போரேறி
மழையாடு சிமைய மால்வரைக் கவாஅன்
வரையாடு வருடைத் தோற்றம் போலக்
கூருகிர் ஞமலிக் கொடுந்தா ளேற்ற
ஏழகத் தகரோ டுகளு முன்றிற்

இங்கே வலியுடைய என்ற சொல் இருவகையில் பொருள் கொள்ளும்படி வந்துள்ளது. இங்கே வலியுடைய என்பது சுங்க அதிகாரியின் மனவலிமையை சுட்டுவதாக அர்த்தம் கொள்ளலாம். மனவலிமை இல்லாதவன் சுலபமாகக் கைக்கூலி வாங்கிக்கொண்டு அரசனை ஏமாற்றுபவன் ஆகிவிடலாமல்லவா?

இந்நாளில் வாழும் நமக்கு இது ஒன்றும் புதுமையான செய்தி இல்லை. ஆனால், பழந்தமிழ் நாட்டில் அரச நீதியை நடத்துபவர் எவ்வாறு மனத்திட்பம் வாய்ந்தவராய் இருந்தனர் என்பதை இவ்வடிகள் அறிவுறுத்துகின்றன.

மேலும், அவர் வெறும் மனோதிடம் கொண்டவராக மட்டும் இருந்தால் போதாது, பிறர் அவரை ஏமாற்றாது இருக்கும்வண்ணம் சுங்க அலுவலர் தமது அதிகாரத்தைச் செலுத்தக் கூடியவராய் இருக்க வேண்டும். இதனாலேயே புலவர் சுங்க அதிகாரி, மனவலிமையோடு நேர்மையானவராய் மட்டுமல்லாது, படை வலிமையாலும் தம் அதிகாரத்தைச் செலுத்தக் கூடியவராய் இருந்தார் என்பதை அறிவிப்பதற்காக

வலியுடை வல்லணங்கினோன் (பிறரை வருத்தக்கூடிய பலமுடையவன்) என்று கூறுகிறார்.

என்ன பிரமிப்பில் உள்ளீர்களா? இன்றைய தொழில்நுட்ப காலத்தில் ஏற்றுமதி , இறக்குமதியை நிர்வகிப்பது எத்தகைய கடினமான செயலாக உள்ளது ஒவ்வொரு நாட்டுக்கும். இதனை நுட்பமாக, திறமையாக சுங்கம் விதித்து உலகத்துக்கே வணிகத்தின் முன்னோடியாக நம் முன்னோர்கள் இருந்திருக்கிறாரகள் என்பது எத்தகைய உணர்வை நமக்கு அளிக்கிறது. இன்று அரசங்கத்தை, அரசியலை கட்டுப்படுத்தும் மந்திரக்கோல் வணிகர்களிடம் இருப்பது நம்மில் எத்தனை பேர் உணர்ந்து கொண்டிருக்கிறோம். தமிழினத்தை தலை நிமிர, அதிகாரத்தை கைப்பற்ற வலுவான தொழில் முனைவோராக தமிழ் மக்கள் மாறுவதே தொடக்கமாக இருக்கும்.

சங்க இலக்கியம், வரலாற்று ஆய்வாளர்களின் ஆய்வுகளை மெய்ப்பிக்கும் இலக்கிய சான்றுகள். இவற்றில் இல்லாத தகவல்களே இல்லை எனலாம். பழம் இலக்கியங்களை படித்து என்ன ஆகப்போகிறது என நினைப்பவர்கள் சற்றே நேரம் ஒதுக்கி இவ்விலக்கியங்களில் கூறப்பட்டுள்ள வாழ்வியலை படித்தர்களானால், அறம், காதல், வீரம், வணிகம், தலைமை, ஆளுமை என்பதெல்லாம் என்ன என்பதில் தெளிவான பார்வையை பெறுவார்கள். தெளிவு பிறந்தால் அச்சமூகம் நிச்சயம் சிறந்ததொரு சமூகமாக வளர வாய்ப்புள்ளது. மேலைநாட்டு வாழ்வியலை கற்றுக்கொள்ள காட்டும் ஆர்வத்தில் ஒரு பங்கேனும் நம் பண்டைத்தமிழ் கலாச்சாரத்தையும் கற்றுக்கொள்ள காட்டுவோமாக.

தொடர்ந்து ஆதரவு தரும் வாசகர்களுக்கும், தமிழ் உறவுகளுக்கும் நெஞ்சார்ந்த நன்றிகள். அடுத்த வாரம் சந்திக்கலாம் .

--

இளவரசி இளங்கோவன்,
மொன்றியல் கனடா.



# இரை

வாசல் பெருக்கிக்
கோலம் போட்டு
மூச்சிறைக்கத் தண்ணீர் இழுத்து
பாத்திரங்கள் பத்து துலக்கி
வேகும் உயிரை நீரில் அமிழ்த்தி
தெருக்குழாயில் சண்டைத் தவிர்த்து
குடம் குடமாய் நீர் அள்ளிவந்து
குழந்தைகளைக் குளிப்பாட்டி
அரக்கப் பரக்க சமையல் செய்து
இரு பிள்ளைகளுக்கு ஊட்டிவிட்டு
அலுத்து வந்து இருவருக்குமான
மதிய கட்டுச்சோறு கட்டி
காலை சாப்பாடும்
பரிமாறிய வேளையில்
கன்னம் சிவக்கத் திட்டு வாங்கி
வேறுவழியின்றி
எரியும் வயிற்றில் பசியைக் கொட்டி
நடையோட்டத்தில் நேரம் சுருக்கி
அலுவலகக் கதவை அச்சத்துடன் திறந்து
உட்புகுந்தால்....
அதிகார அறையோ
கழுத்தை நெரித்து
மன்னித்து வெளியில் தள்ள
தாகம் தீரத்தீர
என் கண்ணீரை வாரிப் பருகும்
கொடும் காலத்தைக் கடிந்து
வியர்வையோடு வழியும்
வீதி எச்சில் பார்வைகளையெல்லாம்
கழுவித் துடைத்தெறிந்து
களைத்துப்போய் படுக்கையில்
கண்கள் சொருகினால்
குடலைக் குமட்டும்
பிராந்தி இத்யாதி நெடிகளோடு
உடலை உணவாய்
உயிருடன் தின்னும்
தாலிகட்டிய மிருகம் என்னை!

— அமுதாராம்
மன்னார்குடி.

# கனவென்பது யாதெனில்!

செல்லும் வழியறிந்த வாழ்க்கைப் பயணம்
செயலினால் நிகழவுள்ள நெகிழ்வுத்
தருணம்
எண்ணும் செயல்யாவும் முடிக்கும்
வண்ணம்
திண்ணம் நிறைவேறும் வெற்றிச் சரிதம்

மனக் கோட்டையால் வித்தாடும்
விளையாட்டல்ல
பணம்வாரி இழைத்தால் வரும்
பொருளுமல்ல
தினம் இரவேதுபகலேது ஆராது உழைக்க
மனம் எந்நாளும் தவறாமலதை
நோக்கியோட

சிரமமில்லாமல் விருப்பப்பட்டு
இயல்பாக இயங்க
எத்திக்குச் சென்றாலும் புகழ்வந்து சேரும்
வந்தோம் வாழ்ந்தோம் சென்றோம்
என்றில்லாமல்
உழைத்தோம் சிறந்தோம் வென்றோம்
என்றாக்கிடப்பா!!!

—

இரா. ரம்யபாரதி.

# 01 - கவியினிது

எழுத்துக்கூட்டி
வாசிக்கத்
தொடங்குகிறாள் மகள்...
ஒப்பனையிட்டுக்
கொள்கிறது கவிதையின்
அருஞ்சொற்பொருள்!

02-பெயர் மாற்றம்
தோட்டத்தினை நிறைத்திருக்கின்றன
பெருமரங்கள்

ஊடே திரியும்
ஒற்றைப் பட்டாம்பூச்சிதான்
அதை வனம் என்றழைக்க
வைத்துவிடுகிறது!

03 - 1)
நினைவிலூர்தல்

காதலின் கடைசி
சந்திப்புகளில்
ஏதோவொரு உந்துதல்
தேவைப்படுகிறது
இருவருக்கும்

கவிதைகளில் மூழ்கிய
எனக்கு காதலைப்பற்றிய
கவலைத் தொற்றிக்
கொள்கையில்தான்

கடைசி சந்திப்பு
கடைசியாக இருந்திருக்க
வேண்டாமென எழுதத்தோன்றுகிறது

முதல் சந்திப்புகளை
எழுதத்
தொடங்குகையிலேயே

முற்றுப்பெற்ற
ஒரு காதல் கவிதை
நினைவிலூர்கிறது!

03-2)
ஒரேயொரு காபி

ஒரேயொரு
காபி அமர்வுதான்
முன்பொரு நாள்
இணைவிக்கும்
காரணியானது

ஒரேயொரு
காபி அமர்வுதான்
பிரிவதற்கான
காரணியாகி முன்னே
அமர்ந்திருக்கிறது

இரண்டு நேர்விலும்
நிரம்பிய குவளையின் மரணம்
தள்ளிப்போடப்பட்டது

அதே நிறம்
அதே சுவைதான்
இருப்பினும்
அதே திடம் மற்றும்
எழவில்லை

பிரிவைக் கூறியபின்னரும் எழுந்திருக்காத
இருவரிடத்தும்!

04 - குதூகலிப்பு
தரையிலிருந்து

'டாடாவெனும்'
போதிருந்த
குதூகலிப்பிலில்லை...

விமானத்திற்குள்
இடுப்பினை இறுகப்பிடித்திருக்கும்
பெல்ட்டோடு
அருகில் தெரியும்
வானம்!

05 - காவலன்
இரவின் வெப்பத்தினை புழுங்கல்களாக
சேகரிக்கத் தெரியாதவர்

தூக்கமென்பதை
பகலிலேயே குடித்துப்பழகியவர்

ஒரு இலட்சம் சதுர
அடி க்ரானைட் தொழிற்சாலைக்கு
காவலாளி

இரவுப்பணிக்கு
வருவதற்கு
முன்புவரை

எதிரெதிர் காம்பவுண்ட் வீடுகள்
பத்திற்கும்
கேட்குமாறு தூக்கத்தில்
ஊதுகிறார் ஏழ்மை
விசிலை!

--

ரகுநாத் வ,
மதுரை.

**6ஆம் ஆண்டில்
அடியெடுத்து
வைக்கும் இந்த
நேரத்தில்...**

**படைப்பாளர்கள்,
வாசகர்கள் மற்றும்
எங்களுக்கு
தொடர்ந்து
ஒத்துழைப்பு
வழங்கிவரும்
அனைவருக்கும்
எங்கள் நன்றிகளும்,
வாழ்த்துதுகளும்!!**

--

**ஆசிரியர் குழு,
திறவுகோல்
மின்னிதழ்.**

# சிரிப்பு..!

நீ ஒரு முறைதான்
சிரித்தாய்...!
நான் தினமும்
சிரித்துக்கொண்டே....
இருக்கிறேன் ..!?

பூவின் வேதனை..!

கசங்கியது நான்
மட்டுமல்ல....!
அவளும் தான்....!
ஆனால் -
விடிந்ததும் ....!
நான் மட்டும் . ..
குப்பை கூடையில்...!?.

காதல்...!
காதலில் தோல்வி ....
ஆனாலும் -
இன்னும் வாழ்கிறது
குழந்தையின் பெயரில்....!?

வசூல்..!?
பரலோகம் சென்றாலும்
வசூலிக்கப்படுகிறது
தனியார் வங்கிக் கடன்.....;?

வாழ்க்கை .!
எப்படி குறிப்பெடுத்து.....
படித்தாலும்....
புரியவேயில்லை...
வாழ்க்கைப் பாடங்கள்.....!?

கடவுள்...!?

ஆலயத்தில் அமைதி....
கடவுள் குரல் கேட்கிறது....
ஓ....!?
குழந்தை அழுகிறது...!?

—

முனைவர். சா.சம்பத்,
தேசிய பயிற்சியாளர்,
மன்னார்குடி.

# தொலைத்த அந்த சுகமான கிராமத்து வாழ்க்கை



முன்னுரை :
பெரிதாக எந்தவித எதிர்பார்ப்புகளும் இருந்ததில்லை, ஆடம்பரமான வாழ்வை அணுவளவும் யோசித்ததில்லை, இருப்பதை வைத்து எளிமையாக வாழ்ந்த அன்றைய கிராமத்து நாட்கள். எத்தனை மகிழ்வான தருணங்கள், எத்தனை சுகமான அனுபவங்கள், கவலையில்லா நிம்மதியான உறக்கம், இயற்கையோடு சுற்றித்திரிந்த நாட்கள் இப்படி எண்ணிலடங்கா எத்தனை பொக்கிசங்களை உள்ளடக்கியிருந்தது என்பது என்னைப் போன்று 1980, 90களில் பிறந்த தலைமுறைகளுக்கு நன்றாகத் தெரியும். எவ்வளவோ தொழில்நுட்பங்கள் வளர்ச்சியடைந்த இந்த காலத்திலும் கூட அந்த பழைய கிராமத்து நிகழ்வுகளை இன்றும் மனம் அசைபோடுகின்றது. அந்த நாட்கள் மீண்டும் கிடைக்குமா என்று ஏங்கித் தவிக்கிறது. அந்த பசுமையான நினைவுகளை இந்த உரையில் பகிர்கிறேன்.

நோயற்ற இயற்கை வாழ்வு :
இருபதாம் நூற்றாண்டு எத்தனையோ நவீனங்களை இந்த உலகிற்கு அறிமுகப்படுத்தியது அதிலொன்று மன அழுத்தம் அப்போது தான் என்னைப் போன்றோருக்கு தெரியும் மன அழுத்தம் என்ற வார்த்தை நம் தமிழ்மொழியில் இருந்ததா? என்று. இயற்கையாக கொல்லையில் கிடைத்த காய்கறிகள், பழங்கள், கீரைகள் மற்றும் கிழங்குகள் இவற்றை பயன்படுத்திய உணவு முறைகள், வீட்டில் பசுமாட்டின் பால் அதிலிருந்து உரைஊற்றிய தயிர் மற்றும் நெய், செக்கில் ஆட்டிய எண்ணெய், அவித்து ஆலையில் அரைத்த அரிசி இப்படி இயற்கையோடு இயைந்தது அன்றைய வாழ்வு.

ஒரு கிராமத்திலேயே ஒருத்தர்,ரெண்டு பேருக்கு மட்டுமே இருந்த இந்த மாரடைப்பையும், ரத்தக்கொதிப்பையும் ஏதோ அரிய நோய்களாக அன்று எண்ணி, மேலத்தெரு புதுவீட்டு அய்யாவுக்கு மாரடைப்பாம் பாவம்! என்று நாள்முழுதும் புலம்பித் தீர்க்கும் பாட்டி. வயிற்றுவலியா? நல்லெண்ணெயை அடிவயிற்றில் தேய், சளி பிடித்துள்ளதா? தூதுவளை அடை சாப்பிடு, உடம்பைத் தேற்ற நாட்டுக்கோழி சாறு, குடல் பூச்சிக்கு வேப்பண்ணெய், உடல் சூட்டுக்கு நல்லெண்ணெய், தலைமுடிக்கு சீகைக்காய், பல்லுக்கு வேப்பங்குச்சி இதெல்லாம் கிராமத்து பாட்டி சொன்ன சித்த வைத்திய முறைகள். சொல்லப்போனால் அன்றையநாட்களில் மருத்துவமனையை அணுகியதே மிகக்குறைவு.

அழகான கிராமத்து நாட்கள்:
அதிகபட்சம் இரவு விழித்திருக்கும் நேரம் 9 மணி அதற்குமேல் நடுச்சாமம் தான். ஒலிக்கடிகை இல்லாத விழிப்பு. வயலுக்கு செல்லும் தாத்தாவிடமிருந்து நீராகாரம் பின் வெங்காயம் வறுத்த மிளகாய் மற்றும் உப்பு மாங்காயுடன் இரவு வைத்த பழையசாதம்

என்று அழகான நிகழ்வுகள். என்றுதான் ஞாயிறு சனி வரும் நண்பர்களுடன் விளையாடலாம் என்ற ஏக்கம் அந்த வாரம் முழுவதும் மனதில் ஓடிக்கொண்டே இருக்கும். ஆச்சர்யமான விடயம் என்னவென்றால்,கைபேசி இல்லாத அன்று எந்தவித முன்னறிவிப்பும் இன்றி சரியான நேரத்தில் விளையாட கூடும் நண்பர்கள். மைதானத்தில் அப்பா கையில் கம்புடன் தேடிக்கொண்டு வரும்போதுதான் தெரியும் மதியஉணவுக்கு நேரமானது என்று. இப்படி எல்லாமே ருசிகரமானவை. அன்றைய நாட்களில் திங்கட்கிழமை காலை பள்ளி செல்லவேண்டுமே! என்ற கவலையை தவிர வேறொன்றும் இருந்ததில்லை. பஞ்சுமெத்தையில்லை, ஆனால் கோரைப்பாயும்,தலையணையும் சுகமான தூக்கத்தை தந்தது. தாத்தா,ஆத்தா,அம்மா,அப்பா,தம்பி, மற்றும் தங்கை என்று அனைவரும் அருகருகே உறங்கினோமேயன்றி அறையிலில்லை.

கைபேசியில்லா பொழுதுபோக்குகள்:
அன்றைய நாட்களில் சலிப்பு என்ற வார்த்தைக்கு அர்த்தமே தெரிந்ததில்லை ஏனென்றால் பொழுதுபோக்குகளுக்கு பஞ்சமே இருந்ததில்லை. நண்பர்களுடன் ஆற்றங்கரையில் நாகப்பழம் சாப்பிட்டதும், கொல்லையில் மரவள்ளிக்கிழங்கு சுட்டு சாப்பிட்டதும், அணில் கொத்திய மாம்பழம் சுவைத்ததும், குளத்தில் தூண்டில் போட்டு மீன் பிடித்து அம்மாவிற்கு தெரியாமல் சமையல்கட்டிலிருந்து உப்பு,புளி எடுத்து சென்று நண்பர்களுடன் கூட்டாஞ்சோறு ஆக்கி சுவைத்ததும் இன்றும் பசுமரத்தாணி போல் நெஞ்சில் பதிந்துகிடக்கிறது.

50 காசுக்காக அங்கிங்கென்று வீட்டில் எல்லா இடங்களிலும் தேடி ஒருவழியாக திரட்டி, ஒரு மணிநேர வாடகைக்கு சிறிய மிதிவண்டி எடுத்து சுற்றிவிட்டு அதை திரும்ப விட மனமில்லாமல் சில நிமிடம் தாமதமாக சுற்றிவிட்டு பின்பு கடையில் விட்டுவிட்டு அந்த நேரப்புத்தகத்தில் நேரத்தை குறைத்து எழுதும் நினைவு இன்றும் நகைப்புக்குள்ளாக்குகிறது.

விடுமுறைநாள் விளையாட்டுக்கள்:
ஒவ்வொரு காலங்களிலும் ஒவ்வொரு விளையாட்டுக்கள், யார் உருவாக்கினார்கள்? யார் கடைப்பிடித்தார்கள்? என்று எதுவும் தெரியாது ஆனால் விடுமுறை நாட்களில் நண்பர்களிடமிருந்து கற்றுக்கொள்வது ஒரு மகிழ்வாய் இருக்கும்.

பம்பரம், பளிங்கு, கிட்டிப்பில், மட்டைப்பந்து, எழுகல்லு, சில்லுகோடு, பல்லாங்குழி, ராஜாராணி, நூத்துக்குச்சி, பச்சைக்குதிரை, வண்ணம்பிடிச்சி, ஒளிஞ்சிபிடிச்சி இப்படி புதிது புதிதாய் எத்தனையோ விளையாட்டுக்கள் அனைத்தும் அறிவை பெருக்கி, உடலை உறுதிசெய்து, மனதிற்கு மகிழ்வளிக்குமேயன்றி ஒருபோதும் பாதிப்பு தராது.

உறவுகளை பேணுதல்:
அன்றைய நாட்களில் வீட்டிற்கு உறவினர்கள் வரப்போகிறார்கள் என்றாலே மனதில் ஏதோ

ஒரு வித இனம்புரியா மகிழ்வும் ஆவலும் ஏற்படும். எந்தவித முன்னறிவிப்பும் இன்றி காலையில் காகம் கரைந்ததை மட்டுமே எண்ணி ஏதோ ஒரு உள்ளுணர்வில் குடும்பமே காத்திருப்பதும் அதே போன்றே சரியாக அந்த உறவினர்கள் வந்து நிற்பதும் இன்றும் நினைத்தால் அது பிரம்மிப்பான விடயம் தான். அவர்களை முகமலர்ச்சியுடன் வரவேற்று தண்ணீர் குடுக்கும் அம்மா, இலை வெட்டி வருகிறேன் என்று ஓடும் அப்பா, அந்த நாற்காலி எடுத்து போடு என்பார் தாத்தா, எப்பா தேனீர் குடிக்கிறிங்களா? இல்லை குளிர்பானம் ஏதும் வாங்கிட்டு வரவா? என்று கேட்கும் பாட்டி இப்படி குடும்பத்தில் அனைவரும் பாசத்துடன் உபசரிப்பதும், வந்தவர்களை நன்கு உபசரித்துவிட்டு அவர்கள் கிளம்புறோம் என்று சொல்லும்போது, ரெண்டு நாள் கழிச்சி போகலாமே என்று அம்மா சொல்லுவாங்க, மாடு கண்ணெல்லாம் கெடக்கு தங்கச்சி போய் பாக்கணும் திருவிழாவுக்கு வந்து தங்கிட்டுப்போறோம்! என்று அவர்கள் சொல்ல அனுப்ப மனமில்லாமல் பேருந்து நிலையம் வரை சென்று சோகத்துடன் வழியனுப்பும் சில அன்பான நிகழ்வுகளை நினைக்கும்போது இன்றும் மனம் நெகிழ்ச்சியடையும்.

உறவினர்களை நலம் விசாரிக்க அன்றையகாலத்தில் அஞ்சலகத்தில் உள்நாட்டு கடிதம் என்ற ஒன்று விற்கும். அதை வாங்கி வந்து அன்புள்ள மாமா, அத்தை என்று தொடங்கி, நிற்க என்று இரண்டாம் பத்தியில் குடும்பத்தின் உறுப்பினர்கள் அனைவரின் விசாரிப்புகளையும் எழுதி முடிப்பதற்கே மனமின்றி, பாசமிகுதியால் கடிதத்தின் பின்புறம் உபரி பகுதியிலும் எழுதி கடிதத்தை நிரப்பி அன்பை பகிரும் அழகான அனுபவங்கள் இன்றும் மறக்க முடியாதவை.

திருவிழா மற்றும் திருநாட்கள்:
பண்டிகை நாட்கள் என்றாலே ஆர்வம் காட்டும் சில விடயங்கள் புத்தாடை, வீட்டில் செய்யும் சுவையான பலகாரங்கள், பட்டாசு மற்றும் உறவுகள் ஒன்றுகூடல். மேலும் ஒரு அற்புதமான நிகழ்வு என்னவென்றால், திரை பிரபலங்கள் மற்றும் பண்டிகை படங்கள் பொறித்த வாழ்த்து அட்டைகள் மூலம் நண்பர்கள் மற்றும் உறவினர்களிடம் வாழ்த்துக்களை பரிமாறிக்கொள்வதும் அவர்களிடமிருந்து திரும்ப வரும் வாழ்த்து அட்டைகளை ரசித்து மகிழ்வதும் அன்றைய நாட்களில் பேரானந்தம்.

திருவிழாக்கள் என்றாலே கோயிலுக்கு குடும்பத்துடன் மாட்டுவண்டிகட்டி செல்வதும், வழிபாடு முடிந்து நண்பர்களுடன் ராட்டினம் சுற்றுவதும், பாட்டி தந்த காசில் பஞ்சு மிட்டாய் வாங்கி சுவைப்பதும், கோயில் பந்தியில் கறிசோறு சாப்பிட்டதும், இரவில் கிராமமே சேர்ந்து ஒளிநாடா திரைகட்டி படங்கள் பார்த்ததும் மறக்கமுடியாத அனுபவங்கள்.

முடிவுரை:
இப்படி காலை எழுந்தது முதல் தூங்கச்செல்லும் வரை ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு

புதுப்புது விடயங்களில் மகிழ்வுற்று வாழ்க்கையை சுவைத்து வாழ்ந்த சுகம் அந்த கிராமத்து வாழ்க்கையில் தான். குடும்பம், வேலை, பொருளாதாரம் போன்ற பலவற்றுக்காக ஓடிக்கொண்டிருக்கும் இன்றைய அவசர உலகில் அத்தனை சுகங்களையும் அடங்கிய சொர்க்கமான வாழ்க்கையை அனுபவித்தவர்கள் என்ற மனநிறைவு ஒருபுறம் இருந்தாலும், இந்த அத்தனையும் வரும் தலைமுறையினருக்கு கிட்டாமல் தொலைந்து போய்விட்டதே என்ற கவலை எப்போதும் மனதை வாட்டுகிறது.

— நா.செல்வமுருகன்
மின்னஞ்சல்: selva_sm2007@hotmail.com

---

## தங்க மீன்கள்

வண்ண வண்ண மீன்கள்
அழகழகாய் நீந்துகின்றன
கண்ணாடித் தொட்டிகளில்

நான்கு சுவர்களுக்குள்
வாழ்க்கையைத்
தொலைத்து விட்டவர்களாய்
பெண்கள்

நீர் உண்டு
காற்று உண்டு
உணவு உண்டு
சுதந்திரம் மட்டும் இல்லை

கவிதையோ
கதையோ
கற்பனைச் சித்திரமோ
கனவுகளில் மட்டும் நீளும்

தூண்டில்கள் இங்கே
போடப்படுவதில்லை
வலைகளும் இங்கே வீசப்படுவதுமில்லை

பாதுகாப்பு வளையத்தில்
சிக்கியே
சீர்மிகு ஆற்றல்
சிதைக்கப்படுகிறது

கண்ணாடி மீன்கள்
துள்ளி மேலெழுந்து
எட்டிப் பார்க்கையில்
தலைத்தட்டி அடக்கப்படுகிறது

இரவுப்பகலாய் நீந்தியும்
விடியல் மட்டும் இல்லை
கடக்கவியலாத் துயரங்களுக்கு
வடிகாலும் இல்லை

உற்றுப்பார்க்கும் மீன்களை
சற்று உற்றுப்பாருங்களேன்
அழுகிறா? சிரிக்கிறதா?
உங்கள் தங்க மீன்கள்!

பெ. விஜயலட்சுமி,
காஞ்சிபுரம்.
6380704001



# பயணற்ற நாட்கள்

சாளரத்தின் திரைச்சீலையைத்
தடாலடியாய் விலக்கி
உள்நுழையும் காற்றில்
புழுக்கம் நடுங்கி விலகுகிறது
வீட்டிற்குள் புகுந்த பட்டாம்பூச்சியைப்
பூவின் விரல்களால் வெளியேற்றி
வண்ணச்சிறகடித்து மகிழ்கிறாள் மகள்
அன்றைய பணிமிகுதித் துயரைத்
தொலைக்காட்சியின்
நகைச்சுவை அலைவரிசையில்
மெல்ல விடுவிக்க முயல்கையில்
கடன்கொடுத்தவனின் அழைப்பு
அலைப்பேசி வழி
பாசக்கயிறை வீசுகிறது
மளிகைகள் தீர்ந்துபோக
பாத்திரங்களின் அடியைத்
துடைத்துச் சுரண்டிடும் சப்தம்
நெஞ்சைக் கசக்கிப் பிழிகிறது
தலைவலிக்கெனத் துவங்கி
தினம் பழக்கமாகிப்போன
மாலைநேரத் தேநீரில்
சக்கரையின் சுவை குறைந்துள்ளது
நிச்சயமாக வரும் வாரங்களின்
ஞாயிற்றினை எதிர்த்து
முழுமிளகாய் சாம்பார்
இரசம் மோர் கைப்பற்றி இரசிக்கலாம்
சுவையற்ற நாவைச்
சுமந்தலையும் அபாக்கியம்
வாழ்தலின் சுமையைப் பன்மடங்காக்க
அலுவலக எதிர்மேசையில்
கிளர்ந்தெழும் மசாலா வாசனை
உணவுமண்டலத்தை வெடிவைத்துத்
தகர்க்கிறது
ஒன்றுக்கும் பயணற்ற நாட்களை
வலியவரும் அனுதாபங்கள்
தீமூட்டி எரிக்க
மனைவியின் நைந்த ஆடையாய்
கிழியும் தருவாயில் மனம்
இருந்தாலும் ஓர்நாள்
இலையுதிர்காலத்தின் முடிவில்
வசந்தகாலம் வாய்க்கும் என்று
நத்தையாய் நகர்கிறது
நாகரீக நலிந்த வாழ்வு.

புளித்த வாழ்வின் மிச்சம்.

திரும்பவும் ஒரு தோல்வியை
நெருப்பின்மேல் சருகாய் வீழ்ந்து
கருகிய இதயத்தோடு மீள்கையில்
பார்வையில் சலிப்பினை உமிழ்ந்து
அனுதாபத்தின் கைக்குட்டையால்
துடைக்கும் சாக்கில் நெருங்கிடும்
பழகிய முகங்கள்
அக்கறையின் மிகுதியில்
தேடிவந்து இரங்கும் தருணங்கள்
வாழ்வை வெறுக்கடித்துக்
குருதியில் பாய்ச்சும்
கொதித்திடும் திரவத்தை
பாலைவனமாய் வெறிச்சோடி
மௌனத்தை அடைகாக்கும்
நரக வீதிகளைச் சிரமத்தோடு நடந்து
வீட்டின் கதவுகளைப்
பூனையின் கால்களால் கடக்கையில்
சிறைச்சாலையின் வன்மத்தோடு
படமெடுத்தாடுகின்றன
விசமிகுந்த நாகங்கள்
ஒருசொல் மயிலிறகாய் வருடி
இலையுதிர்ந்த கிளைகளில்
துளிர்களைத் தழைக்கின்றது

மற்றொரு சொல்
சின்னாபின்னமாய் கிழித்துப்
பசுமரத்தாணியாய்
சிலைவையில் அறைகிறது
இருள்சூழ்ந்த வாழ்வை
மின்விளக்கின் வெளிச்சத்தால்
ஒளிரூட்டப்பார்க்கும் அறையில்
கடிகார முற்கள்
அகவையைக் மெல்ல கடத்தி
தன் கூரிய பயணத்தால் கீறிடும்
மீண்டெழும் அலைகளாய்
திறன்மிகுந்து எழுகையில்
உயரும் கரைகளை
மீள வலுவில்லை
துயரின் பெருங்கடலில்
கலங்கிக் கலக்கிறது
புளித்த வாழ்வின் மிச்சம்
மேலிருந்து அழைக்கும் குரலைச்
செவிமடுக்கத் துவங்குகிறேன்
ஆறுதலாய் தோள்தடவி
என் பாதைகளெங்கும் உதிர்கின்றன
வேனிற்காலத்துக் கொன்றை.

நவீன நீர்வாழ்வு

பனிக்கட்டிகள் மிதக்கும்
கண்ணாடி கோப்பைகளில்
மனங்கள் விழைந்து மோதிட
வண்டிவண்டியாய் களவுபோன
ஆற்றின் ஆதாரம்
வாரக்கடைசியில்
தள்ளாடும் போதையேற்றி
தலைசுற்றி வீழ்கிறது
மதுபானக் கடைகளுக்குள்...
ஆபத்தில் காக்க
அபயக் கண்ணன் யாருமின்றி
முழுவதுமாய் துகிலுரிந்தபின்
குண்டுங்குழியுமாய்
மேனியெங்கும் முட்புதர் போர்த்தி
பிணங்களைச் சுமக்கும்
இடுகாட்டுப் பாழ்வெளியாய்
கானலால் கதறியழும்
முப்போகம் தளிர்த்த
முதுபெரும் நீர்வழி...
தூய்மை இந்தியாவின்
துப்புரவு கழிவுகள் மிகையாகி
சாபத்தின் பேரிடராய்
மதிப்பற்றுக் கிடக்கிறது
நாகரிகத் தோற்றுவாய்...
ஊற்றுநீர் கேணிகளில்
ஆழ்துளைக் கிணற்றில்
அடி குழாயில்
உவர்நீரே உற்பத்தியாகத்
தூயநீர் வடிகட்டி இயந்திரத்தில்
நன்னீர் அருந்தி
நகரத்தில் மட்டுமன்றி
நாட்டுப்புறங்களிலும் நகர்கிறது
நவீன நீர்வாழ்வு!

துப்புக்கெட்ட ஊடல்

தேவைகள் தீரத்துவங்கி
விழிப்பிதுங்கும் மாதக்கடைசி
வீட்டினுள் மூளும் பனிப்போரில்
தெருநாயின் விபத்தாகி
இரத்தமும் சதையுமாய்
பிய்த்தெறியப்படும்
பிறந்தவீட்டின் தன்மானம்
எரிமலைக் குழம்பென
வெடித்துச் சிதறும் கோபத்தில்

எக்காரணத்திற்காகவும்
பேசவேக்கூடாதென
வெறிகொண்டு ஏற்கும்
பாஞ்சாலி சபதங்கள்
இரண்டுமூன்று சில்லறை நாட்களையும்
சிரமமின்றி நகர்த்தயியலாமல்

சாளரங்களின் கம்பிகளில்
கன்னங்கள் தேய்க்கும்
மெருகேற்றி அடுத்தநாள் காலையே
வியர்த்த மூக்கோடும்
இளித்த பற்களோடும்
அழைப்பிதழ்களோடு
விருந்துக்கு வந்துவிடும் உறவுகள்
வாயில்களாகிக் கடுப்பேற்றும் கரம்கூப்பி
அப்புறமென்ன
நீறுபூத்த தனல்மேல்
வலுக்கட்டாயமாய் நீரூற்றி
மளிகை வாங்கிவர
மணாளனைஅழைக்கையில்
வெளிவைத்தப் பனிக்கட்டியாய்
மாயமாகித் தேயும்
துப்புகெட்ட ஊடல்
அந்தியில் நறுமணமோடு
உள்நுழையும் பூச்சரங்கள்
புதுமாப்பிள்ளையாய் உன்னையும்
மணப்பெண்ணாக என்னையும் தோற்றி
யாமத்தின் பெரும்பசிக்குப்
பெரும்படையலாய் படைத்து மகிழ
சம்பளம் மெய்ப்படக்கூடும்
முதல்நாள் வைகறையில் !

ஆராய்ந்த யோசனை

முன்னறிவிப்புகள் ஏதுமின்றி
கூரிய ஈட்டியாய்
மார்பில் துளையிடும்
தீவிர வியூகங்களைக்
களங்கண்டு உடைத்தெறிய
தெருக்களில் திரள்கின்றன
எதிர்வினை பாய்ச்சல்கள்
சுவாசக்காற்றை நாஞ்சாக்கி
விழித்திரைகளைக் கருக்கி
கர்ப்பத்தை மலடாக்கி
கனவுகளைக் குருடாக்கி
இதயங்களை எரியூட்டி
உயிரோடு வாழச்சொல்லும்
உண்மைசெத்த பூமியில்
வாய்திறந்தால் வழக்கு
வாதிட்டால் வாய்க்கரசி
எமதர்ம இராஜாக்கள்
அரியணையில் வீற்றிருக்க
சும்மா இருப்போர்க்கே
சுகபோக வாழ்வோடு சுடுசோறு
சுரனைபெரும் தீரர்க்கோ
சொந்தமாகும் சுடுகாடு
மதுக்கடைகள் திறந்துவைத்து
மகளிர்தாலி அறுத்தீர்
இலவசங்கள் வாரித்தந்து
இளித்தவாயை இரசித்தீர்
நம்பிக்கையை அழித்தீர்
நடுவழியில் கைவீட்டீர்
நதிகளைத் தாரைவார்த்தீர்
நஞ்சை அமுதென ஊட்டினீர்
ஏர்பிடிப்போர் வீடுகளைக்
பொன்விலையும் கழனிகளைப்
கைதொழும் கோவில்களைக்
கண்ணீர் நிரம்பிய கேணிகளைப்
போக்குவரத்திற்கு அபகரித்துச்
பொட்டல்காட்டைப் பரிசளித்தீர்
நாட்டை வளமாக்க
வீட்டை இடிப்பதுதான்
புதுமை விடியல்போலும்
காட்டைச் சூரையாடி

கவின்சோலை அமைப்பதுதான்
சதிகார திட்டம்போலும்
விழியெல்லாம் பெருவெள்ளம்
வழியெல்லாம் அடக்குமுறை
மொழியெல்லாம் ஊமையாக
சாபங்களில் ஆள்வதுதான்
சர்க்காரின் நீதிநெறி
சரியென்று வாழ்வதுதான்
சனங்களுக்கு வகுத்தவிதி!

— பொன்.தெய்வா.
ஐவேலி, விழுப்புரம் மாவட்டம்.



---





**N.S. சாய்ருத்ரா**
நான்காம் வகுப்பு, ஊ. ஒ. நடுநிலை பள்ளி,
வடுவூர் தென்பாதி.



## அனைவருக்கும் நிழல்போல் இருந்தவன் நீ

*இப்பொழுது
நினைவாய்
மாறினாய்...!
கண் இமைக்கும்
நேரத்தில்
கண்ணீர் துளியாகினாய்...!!*

*எப்படியடா உந்தன் உறவுகளை
விட்டுச்செல்ல மனம் வந்தது?*

*எத்தனை நாட்கள் ..!
எத்தனை நண்பர்கள் ...!
உந்தன் வடுவூர் மண்ணில் ...
உனக்காக கண்ணீர் சிந்திக் கதற விட்டு
விட்டு•••
இயற்கையோடு இணைந்து விட்டாயே
..!*

*எப்படியடா மறக்கும் உன் மண் ..!*

*இதயங்களெல்லாம் நொறுங்க,
இமைகளெல்லாம் நனைய,
எங்களை தவிக்கவிட்டு
எங்கோ நீ பயணமானாய்...!!*

*இருபது வருட நம் நட்புக்குள்
ஏழு ஜென்ம பந்தம்...!
நட்ப்பென்ற ஒன்றுக்குள்
நாம் சேர்ந்து நின்றோம்..!!*

*நான் உன்னை சந்தித்திருக்காவிட்டால்
நண்பனுக்காக எதையும் செய்யும்
நண்பன் ஒருவன்
எனக்கு கிடைத்திருக்கமாட்டான்... !*

*நீ எங்களை விட்டு தூரத்திலில்லை
நினைவுகளில் இருக்கிறாய்...!
எங்கும் போகவில்லை
நீ எங்கள் இதயங்களில் வாழ்கிறாய்...!!*

*நாம் நட்புக்கு என்றும் மரணமில்லை...!!*

—

சிவா,
வடுவூர்.



# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...
பகிரி: +91 8220567322

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

—

கி. மாணிக்கம்,
திறவுகோல் ஆசிரியர், குழு.